Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 292 | வெள்ளிக்கிழமை | புரட்டாதி 01 ஆம் நாள் 17 செப்ரெம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16 விலை : ரூ.30

செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## தொற்று 2,271 சாவு 1,118

கொழும்பு, செப். 17

இலங்கையில் மேலும் 2 ஆயிரத்து 271 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காண 15 >

# ஊரடங்கை நீடிக்கவேண்டும்

**அச்சம் இன்னும் நீங்கவில்லையென விசேட மருத்துவ நிபுணர்கள் சங்கம் சுட்டிக்காட்டு**

கொழும்பு, செப்ரெம்பர். 17

இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தைத் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்று விசேட மருத்துவ நிபுணர்கள் சங்கம், அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி கட்டுப்பாடுகளுடன் ஊரடங்கைத் தளர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளநிலையில், அவ்வாறு தளர்த்தினால் நாடு மீண்டும் கொரோனாத் தொற்று ஆபத்து நிலைக்குத் தள்ளப்படும் என்றும் விசேட மருத்துவ நிபுணர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. 15 >

## தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு மட்டு. நீதிமன்று தடை

மட்டக்களப்பு, செப். 17

தியாகதீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு, மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம், நேற்றுமுன்தினம் தடைஉத்தரவு 15 >

## வவுனியாவில் கொரோனாவால் ஐந்து பேர் சாவு

வவுனியா, செப். 17

கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி வவுனியாவில் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

அவர்களில் நால்வர் திடீர் சுகவீனம் காரணமாக வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். 15 >

## அநுராதபுரம் சிறைக்குச்செல்ல தமிழ் எம்.பிக்களுக்குத் தடை

கொழும்பு, செப். 17

அநுராதபுரம் சிறைச்சாலையில் கைதிகளைப் பார்வையிடச்சென்ற மக்கள் பிரதிநிதிகளான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, சிறைச்சாலைக்குள் செல்வதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. 15 >

## தமிழ் அரசியல் கைதிகளை சந்தித்தார் அமைச்சர் நாமல்



கொழும்பு, செப். 17

இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச அநுராதபுரம் சிறைச்சாலைக்கு நேற்றுச் சென்று அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் 15 >

# வெடுக்குநாறிமலையில் விக்கிரகங்கள் மாயம்!

## இராணுவத்தினரின் நடமாட்டம் அதிகம்



வவுனியா, செப். 17

வவுனியா நெடுங்கேணியில் அமைந்துள்ள வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் கோவில் பகுதியில், இந்துத் தெய்வ விக்கிரகங்கள் சில காணாமற்போயுள்ளன.

அதுமட்டுமன்றி, நேற்றுக்காலை தொடக்கம் அதிகளவான இராணுவத்தினர், அந்தப் பகுதியில் காணப்படுகின்றனர். இது தொடர்பில் மக்கள் பிரதிநிதிகள் கவனம் செலுத்தவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் வலியுறுத்துகின்றனர்.

நெடுங்கேணி வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் கோவிலுக்குள் அந்தப்பகுதி மக்கள் வழிபடுவதற்குச் செல்லமுடியாது என தொல்பொருள் திணைக்களம் தடைவிதித்துள்ள நிலையில், அது 15 >

## முல்லைத்தீவைச் சேர்ந்த அரசியல் கைதி விடுதலை

### ஏராளம் கைதிகள் இன்னும் சிறைக்குள்ளேயே

முல்லைத்தீவு, செப். 17

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த அரசியல் கைதியான நடேசு குகநாதன் கொழும்பு மேல் நீதிமன்றால் நேற்று விடுதலைசெய்யப்பட்டுள்ளார். 15 >

## நாடு திரும்புவோருக்கு இனி ஹொட்டல் தேவையில்லை

### சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 17

கொரோனாத் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுக்கொண்ட இலங்கையர்கள், நாட்டுக்குத் திரும்பும்போது, பி.சி.ஆர். பரிசோதனைக்காக ஹொட்டலில் தங்கவேண்டிய அவசியமில்லை 13 >

## ஐ.நா. கடித விவகாரம் விளக்கம்கேட்டு தமிழ் அரசுக் கட்சி கடிதம் 9 பேருக்கும் அனுப்பி வைத்தது

யாழ்ப்பாணம், செப். 17

ஜெனிவாவுக்கு, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி எழுதிய கடிதத்துக்கு மாற்றுக் கடிதம் எழுதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 15 >

## சுமந்திரனும் கஜேந்திரகுமாரும் அரசுக்கு ஏற்ப தூண்டுகிறார்கள்

### சித்தார்த்தன் பரபரப்புக் குற்றச்சாட்டு



அரசின் நோக்கத்தை தமிழ் அரசுக் கட்சியினரே நிறைவேற்றிக் கொடுக்கின்றனர். அரசுக்கு ஏற்பவே சுமந்திரனும் கஜேந்திரகுமாரும் தூண்டுகின்றனர் என்று புளொட் தலைவர் த. சித்தார்த்தன் குற்றம்சாட்டினார்.

(விரிவு பக்கம் 12)

## விடுதலைப் புலிகள் தயாரித்த குண்டுகள் குடமியனில் மீட்பு



சாவகச்சேரி, செப். 17

உள்ளூர்த் தயாரிப்பு வெடிகுண்டுகள் சிலவரணி, குடமியன் பகுதியில் நேற்று பொலி 13 >

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் குண்டுத் தாக்குதலா? அது பற்றி விசாரித்தீர்களா?

## அரசிடம் கேட்கிறார் பேராயர் குழுவின் உறுப்பினர்

கொழும்பு, செப். 17

“உயிர்த்த ஞாயிறு தாக்குதல்போன்று இலங்கையில் மற்றுமொரு அடிப்படைவாத தாக்குதல் இடம்பெறக்கூடும் எனவும், அதற்கான ஆதாரங்கள் தன்னிடம் இருக்கின்றன என்றும் பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளனவா?

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார், உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கும் பேராயர் குழுவின் உறுப்பினர் அருட்தந்தை சிறில் காமினி பெர்ணாண்டோ.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர், மேலும் தெரிவிக்கையில்,

“ஞானசார தேரர் முக்கியத்துவம் மிக்க அதேபோல சர்ச்சைக்குரிய விடயம் தொடர்பான தகவல்களை அம்பலப்படுத்தியுள்ளார். உயிர்த்த ஞாயிறு தாக்குதலைப்போன்று மற்றுமொரு அடிப்படைவாதத் தாக்குதல் விரைவில் இடம்பெறக்கூடும் எனவும், எந்தநேரத்தில் வேண்டுமானாலும் வெடிக்க வைக்கக்கூடிய ஆயுதங்களும், பொருள்களும் தயார்நிலையில் உள்ளன என்றும் தேரர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான தகவல்கள் மற்றும் சாட்சியங்கள் தன்னிடம் உள்ளன என்றும் அதனை நிரூபிக்க முடியும் எனவும் தாக்குதலை நடத்தவுள்ள குழு எது, அந்த குழுவினர்? எங்கு உள்ளனர் என்பது தனக்கு தெரியும் எனவும் இந்த விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தியுள்ளேன் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

ஞானசார தேரர் கூறுவது உண்மையெனில், விடயங்களை அம்பலப்படுத்தியதற்காக அவருக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இவ்வாறு ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தப்பட்டதிலிருந்து இதுவரையில் மேற்படி தகவல்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகள் எவை? தேசிய பாதுகாப்புத் தொடர்பில் பொறுப்பு இருக்கும்பட்சத்தில் குறித்த நபர்கள் இந்நேரம் கைதுசெய்யப்பட்டிருக்க வேண்டும். அதேபோல மேற்படி தகவல்களுக்கு முன்னுரிமை வழங்கி செயற்பட வேண்டும்.” என்றார்.

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு கடந்த திங்கட்கிழமை வழங்கிய நேர்காணலின்போது, இலங்கையில் மற்றுமொரு அடிப்படைவாதத் தாக்குதல் இடம்பெறக்கூடும் என்ற தகவலை ஞானசார தேரர் வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (கு-44)

# அவசரகாலச் சட்டத்தை நீடிக்கக் கூடாது!

## ஆதரித்து வாக்களித்த சு.க. இப்போது போர்க்கொடி

கொழும்பு, செப். 17

“அவசரகாலச் சட்டத்துக்கு எதிர்ப்பு என்றபோதிலும் அத்தியாவசிய தேவையின் நிமித்தமே அதற்கு ஆதரவாக வாக்களித்தோம். எனவே, அவசரகாலச் சட்டம் நெடு நாளுக்கு நீடிக்கப்படக்கூடாது.” என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசின் பங்காளிக் கட்சியான சிறீலங்கா சுதந்திரக்கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவிக்கையில்,

“இராணுவமயமாக்கல் நடவடிக்கையை எமது கட்சி அனுமதிக்காது. அதற்கு கடும் எதிர்ப்பை வெளியிடுவோம். எனினும், இராணுவமயமாக்கலை இலக்காகக் கொண்டுஅவசரகாலச் சட்டம் நிறைவேற்றப்படவில்லை. மாறாக உணவுப் பொருள்களை பதுக்கி, கறுப்பு வியாபார நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாலேயே அதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அவசரகாலச் சட்டம் கொண்டுவரப்பட்டது. குறித்த சட்டத்துக்கு கொள்கை ரீதியில் நாம் எதிர்ப்பு என்றபோதிலும், அத்தியாவசிய தேவையின் நிமித்தம் ஆதரவாக வாக்களித்தோம்.

எது எப்படி இருந்தாலும் அவசரகாலச் சட்டம் நீண்டகாலத்துக்கு நீடிக்காது என நம்புகின்றோம். அதற்கான தேவையும் எழாது.” என்றார். (கு-44)

# கைதிகளை அச்சுறுத்தியதற்காக எம்.பி. பதவி பறிபோகலாம்!

## கண்டனமும் தெரிவிக்கின்றது இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம்

கொழும்பு, செப். 17

இரண்டு சிறைச்சாலைகளில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த மேற்கொண்டதாகக் கூறப்படும் நடவடிக்கைகள் மிகவும் குற்றமானவை. இதனால், அவருடைய நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகூட பறிபோகலாம் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இதுபோன்ற கொடூரமான செயல்கள் சட்டத்தின் ஆட்சிக்கு கடுமையான அச்சுறுத்தலாகும் என்று அதன் செயலர் சட்டத்தரணி ராஜீவ் அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

குற்றச்சாட்டுகளின் தீவிரத்தன்மையின் காரணமாக, அவரால் வேறு அமைச்சுப் பதவியை வகிக்கவோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினராக பணியாற்றவோ முடியாது. குற்றச்சாட்டுகள் குறித்து முழுமையான மற்றும் பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும். குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும்.

கைதிகளைப் பாதுகாப்பது அரசின் பொறுப்பு என்பதை இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்துகிறது.

சட்ட மா அதிபர் உள்ளிட்ட சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் - என்றுள்ளது. (கு-இ)

# தியாக தீபத்துக்கு நேற்றும் அஞ்சலி



யாழ்ப்பாணம், செப். 17

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இரண்டாவது நாளாகவும் நேற்று அஞ்சலி செலுத்தினர்.

நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் மாலை 6 மணியளவில் மலர் தூவி சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

1987 செப்ரெம்பர் 15ஆம் திகதி ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து உண்ணாவிரதத்தை ஆரம்பித்த திலீபன் 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் 26ஆம் திகதி உயிர்துறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (கு-27)

# லொஹான் ரத்வத்தவை சும்மா விடமாட்டோம்!

## கடும் சீற்றத்துடன் பொன்சேகா எச்சரிக்கை

கொழும்பு, செப். 17

“லொஹான் ரத்வத்த இராஜாங்க அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்தமையானது கண்துடைப்பு நாடகமாகும். எனவே, அடாவடியில் ஈடுபட்டுள்ள அவருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவ்வாறு எடுக்கப்படாவிட்டால் எமது ஆட்சியின் போதாவது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.” என்று முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட்மார்ஷல், நாடாளுமன்ற உறுப்பினர் சரத்பொன்சேகா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையில் ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான பொன்சேகா மேலும் தெரிவிக்கையில்,

“பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு சிறைச்சாலைகளில் பல வருடங்களாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகள் கடும் விரக்தியுடனேயே இருக்கின்றனர். பல துன்பங்களை எதிர்கொள்கின்றனர். இவ்வாறான நபர்களை முழந்தாளிடவைத்து இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே துப்பாக்கி முனையில் மிரட்டியுள்ளார். இது சண்டித்தனம் அல்ல. மிகவும் கீழ்த்தரமான செயற்பாடாகும். போர்க் காலத்தில் உயிருக்கு அஞ்சி ஒளிந்தவர்கள் எல்லாம் இன்று குடித்துவிட்டு சண்டியர்களாகின்றனர்.

இவ்வாறு கீழ்த்தரமாகச் செயற்படும் நபர்கள் இனி சிறைக்குள் வந்தால் அவர்களை கைதிகள் இணைந்து தாக்க வேண்டும். கைதிகளின் பக்கம் மக்கள் நிற்பார்கள்.

லொஹான் ரத்வத்த சிறைச்சாலை சம்பந்தமான அமைச்சுப் பதவியை மட்டுமே துறந்துள்ளார். ஏனைய இராஜாங்க அமைச்சுப் பதவிகள் அவர் வசம் உள்ளன. முழு சிறப்புரிமையையும் அனுபவிப்பார். எனவே, இது கண்துடைப்பு நாடகமாகும். லொஹான் ரத்வத்தயின் செயற்பாடு தனி நபரின் மோசமான செயலாகும். எனவே, இதனை இனவாதமாக்க வேண்டியதில்லை. தமிழர்களுக்கு எதிரான செயற்பாடு என காண்பிக்க வேண்டியதில்லை என தமிழ் அரசியல்வாதிகளிடம் கேட்டுக்கொள்கின்றேன்.” என்றார். (கு-44)

# ஊரடங்கில் கடை உடைத்து பொருள்கள் திருட்டு

வவுனியா, செப்.17

வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் கடையின் முன்வாயிலை உடைத்து அங்கிருந்த பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டன.

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அதனை வாய்ப்பாகப் பயன்படுத்தி குறித்த திருட்டு இடம்பெற்றுள்ளது.

சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று வியாபார நிலையத்தின் உரிமையாளர் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (கு-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்ப்பதை விடுத்து உதவி செய்யுங்கள்

*புலம்பெயர்ந்தவர்களிடம் ஜி.எல்.பீரிஸ் கோரிக்கை*



கொழும்பு, செப். 17

**வெளிநாடுகளுகளில் வசிக்கும் இலங்கையர்கள் அரசை விமர்சிப்பதை விடுத்து, நாட்டை முன்னேற்ற உதவிகளை வழங்க முன்வர வேண்டும். அதனை விடுத்து, நாட்டுத் தலைவர்களை விமர்சிப்பது பயனற்றது என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.**

இத்தாலியிலுள்ள இலங்கையர்களை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சந்தித்தார். அவர்கள் முன்னிலையில் வெளிவிவகார அமைச்சர்மேலும் தெரிவிக்கையில், நாட்டுக்காக ஏதாவது சிறந்த வேலைத்திட்டத்தை முன்னெடுப்பது குறித்துச் சிந்திப்பதற்குப் பதிலாக நாட்டை எவ்வாறு அழிக்கலாம்.

நாட்டுக்கு எவ்வாறு அபகீர்த்தியைத் தேடிக்கொடுக்கலாம் என்றே பலர் செயற்படுகின்றனர்.

கொரோனாத் தொற்றுக்கு மத்தியிலும் எமது நாடு சகல துறைகளிலும் தேர்ச்சியைக் கண்டுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களும் நாட்டுக்காக உதவ முடியும். நீங்கள் சம்பாதிக்கும் பணத்தில் ஒரு தொகையை இலங்கைக்கு அனுப்பலாம். அது எமது பொருளாதாரத்துக்கு சக்தியாக மாறும் என்றார். (ம-4)



## யானையின் சடலம் வவுனியாவில் மீட்பு

வவுனியா, செப். 17

வவுனியா ஓமந்தை மாளிகை பகுதியில் யானையின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. யானையின் சடலம் ஒன்றை அவதானித்த பொதுமக்கள் அது தொடர்பாக பொலிசாருக்கும், வனஜீவராசிகள் திணைக்களத்துக்கும் தகவல் வழங்கியிருந்தனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் யானையின் சடலத்தை மீட்டதுடன், விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர். (எ10)

## இலங்கை வரும் ஐரோப்பிய குழு

கொழும்பு, செப். 17

ஐரோப்பிய ஒன்றியத்தின் குழுவினர் எதிர்வரும் 27ஆம் திகதி இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இந்தக் குழுவினர் இலங்கை வருகை தரவுள்ளனர் என்று வெளிநாட்டுத்துறை அமைச்சின் செயலாளர், பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார். (ம-4)

## தடுப்பூசிகள் ஏற்ற இறுதிச் சந்தர்ப்பம்!

மன்னார், செப். 17

மன்னார், நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குள் இரண்டாவது தடுப்பூசி போடத் தவறியவர்களுக்கு இறுதிச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என்று நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி ரூபன் லெம்பேட் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது

ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி அன்றும் அதற்கு முன்னைய திகதிகளிலும் தமக்குரிய முதலாவது பைசர் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டு இதுநாள் வரையில் தங்களுக்கான இரண்டாவது பைசர் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளத் தவறியவர்களுக்கு இறுதிச் சந்தர்ப்பமாக எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை முருங்கன் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் தடுப்பூசியானது வழங்கப்பட உள்ளது. எந்தவொரு தடுப்பூசியையும் இது நாள் வரையில் பெற்றுக்கொள்ளாத 30 வயதுக்கு மேற்பட்ட எவராயினும் தங்களுக்கான சினோபார்ம் தடுப்பூசியையும் எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும். மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள 0770879680, 0232050389 என்ற இலக்கங்களைத் தொடர்பு கொள்ளலாம். என்றார். (எ-60)

## அனுமதியின்றி மணல் அகழ்வு டிப்பர் வாகனச் சாரதி கைது

கிளிநொச்சி, செப். 17

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிசென்ற டிப்பர் வாகனமும் அதன் சாரதியும் பளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பளைப் பொலிஸார் இயக்கச்சி பகுதியில் நேற்றுமுன்தினம் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது அனுமதிப்பத்திரம் இன்றி மணல் கொண்டு சென்ற டிப்பர் வாகனத்துடன் அதன் சாரதி கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரையும், சான்றுப்பொருள்களையும் நீதிமன்றில் பாரப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (ஜ-6)

## 1,000 பட்டதாரிகளுக்கு அரச நியமனம் இல்லை

*சித்த வைத்தியர்கள் சங்கம் ஆதங்கம்*

கொழும்பு, செப். 17

ஆயுள்வேத, சித்த, யுனானி உள்ளிட்ட துறைகளில் பட்டம்பெற்று உள்ளக பயிற்சிகளை நிறைவு செய்துள்ள சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு இதுவரை அரச நியமனம் கிடைக்கவில்லை என்று சித்த வைத்தியச் சங்கத் தலைவர் ஹபில் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு 2017ஆம் ஆண்டில் இருந்து அரச நியமனம் கிடைக்கவில்லை. கொரோனாவை சுதேச மருத்துவத்தின் மூலம் கட்டுப்படுத்த இவர்கள் தயாராக உள்ளனர். எனவே கொரோனா இடர்காலத்தை கருத்தில் கொண்டு சுகாதாரத் துறையை வலுப்படுத்த வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச நியமனம் வழங்க வேண்டும். இது தொடர்பாக சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. எனினும் இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை. எனவே குறித்த பட்டதாரிகளுக்கு உடனடியாக அரச நியமனம் வழங்கி நாட்டு மக்களுக்கு புத்துணர்ச்சியுடன் சேவையாற்ற உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-4,ரி2)

## தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதவர்கள் பண்டாரவளைக்குள் நுழையமுடியாது

கொழும்பு, செப். 17

30 வயதுக்கு மேற்பட்டவர்களில் கொரோனாத் தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதவர்கள் பண்டாரவளைக்குள் நுழையத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கொரோனாவைத் தடுப்பதற்கான மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இந்தத் தடையை அறிவித்துள்ளது. தடுப்பூசி பெற்றுக் கொள்வதை ஊக்குவிப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தடுப்பூசி அட்டை இல்லாமல் நகருக்குள் நுழைய முயன்றவர்களை



பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினர் திருப்பி அனுப்பியுள்ளனர். அத்துடன் அங்கு வீதித் தடுப்புகளும் அமைக்கப்பட்டுள்ளன.


அதேவேளை தடுப்பூசி செலுத்திக் கொண்டமைக்கான அட்டையை வைத்திருக்கும் நபர்களுக்கு, தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள காலப்பகுதியிலும், அத்தியாவசிய கடமைகளைச் செய்துகொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. பண்டாரவளை நகரில் பெருமளவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் இந்தக் கட்டுப்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதேவேளை வடக்கு மாகாணத்தில் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் இந்தக் கட்டுப்பாடு இறுமாக்கப்பட்டுள்ளது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 வருடங்களுக்குள்

# அனைத்து மருந்துகளும் இலங்கையில் உற்பத்தி!

சுகாதார அமைச்சர் தெரிவிப்பு




**கொழும்பு, செப். 17**

**சுபீட்சத்தின் தொலைநோக்கு என்ற கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக எதிர்வரும் நான்கு வருடங்களில், தேவையான அனைத்து மருந்துகளையும் உள்ளூரிலேயே உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் அத்தியாவசிய மருந்துப் பொருள்களுக்கு எந்தத் தட்டுப்பாடும் இல்லை. தேவையில்லாமல் நிதியைச் செலவிட்டு மருந்துகளை களஞ்சியப்படுத்தி வைக்க வேண்டிய தேவையும் இல்லை. சுபீட்சத்தின் தொலைநோக்குக் கொள்கைத் திட்டத்தில் எதிர்வரும் நான்கு வருடங்களுக்குள் அனைத்து மருந்துகளையும் உள்ளூரிலேயே உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை ஒரு லட்சத்து 20 ஆயிரம் ஸ்புட்னிக்வி தடுப்பூசிகள் எதிர்வரும் திங்கட்கிழமை இலங்கையை வந்தடையும். இவை ஸ்புட்னிக்வி தடுப்பூசியின் முதலாவது டோஸைப் பெற்றுக்கொண்ட கண்டி மாவட்ட மக்களுக்காகப் பகிர்ந்தளிக்கப்படும். அடுத்து வரும் 3 நாள்களுக்குள் அவற்றை மக்களுக்குச் செலுத்த எதிர்பார்த்துள்ளோம்.என்றார். (ம-4,ரி2)



## மியன்மார் தூதுவர் பதவி விலகினார்

கொழும்பு, செப். 17

மியன்மாருக்கான இலங்கைத் தூதுவராகப் பதவி வகித்த பேராசிரியர் நளிந்த டி சில்வா, தனது தூதுவர் பதவியை விட்டு விலகியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கான இலங்கைத் தூதுவர்கள் தொடர்ச்சியாக பதவி விலகிவரும் நிலையில், மியன்மாருக்கான தூதுவரும் பதவி விலகியுள்ளார். பதவி விலகிய அவர் நேற்று வியாழக்கிழமை அதிகாலை நாடு திரும்பியுள்ளார். அவர் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவராக 9 மாதங்களாகக் கடமையாற்றிய ரவிநாத் ஆரியசிங்க அண்மையில் பதவி விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

## சட்டவிரோத கசிப்பு உற்பத்தி: சந்தேகத்தில் ஐவர் கைது

நெல்லியடி, செப். 17

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் ஐவரை நெல்லியடிப் பகுதியில் வைத்து பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்தனர்.

கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக நெல்லியடி பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் விரைந்த பொலிஸார் குறித்த இடத்தை முற்றுகையிட்டனர். இதன்போது சந்தேகத்தில் 5 பேரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட ஐவரில் நால்வரிடம் இருந்து 750 மில்லி லீற்றர் கசிப்பும் மற்றைய ஒருவரிடம் இருந்து 101 லீற்றர் கோடாவும் பறிமுதல் செய்யப்பட்டன. அத்துடன் இவர்களிடமிருந்து கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், இவர்களுக்கு எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஐ-125)





## இலங்கைக்கு சுனாமி எச்சரிக்கை

கொழும்பு, செப். 17

இந்தோனேசியாவைச் சுற்றியுள்ள பகுதியில் ஏற்படக்கூடிய பூகம்பம் காரணமாக இலங்கையில் சுனாமி ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று பூகம்பம் தொடர்பான சிரேஷ்ட நிபுணர் நில்மினி தல்தென தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பூகம்பம் ஏற்படக்கூடிய அபாயம் இல்லை. எனினும் பூகம்பம் காரணமாக சுனாமி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. அதனை எதிர்கொள்ளத் தேவையான முன்னாயத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-ரி2)

## ஐ.தே.கவுக்கு நீதிமன்று தடை



கொழும்பு, செப். 17

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க மற்றும் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார ஆகியோருக்கு நீதிமன்று தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து நீக்கப்பட்ட மஞ்சுள வசந்த உள்ளிட்ட 21 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்குப் பதிலாக வேறு சிலர் பெயரிடப்படுவதைத் தடுத்து, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவு தெரிவித்தனர் என்று குற்றம் சுமத்தி, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனையின் பேரில், தாம் கட்சியில் இருந்து நீக்கப்பட்டிருந்தாலும், அடிப்படை ஒழுக்காற்று நடவடிக்கைக்கேனும் முகங்கொடுக்க சந்தர்ப்பம் வழங்காமல், கட்சி உறுப்புரிமையில் இருந்து எம்மை நீக்கியமை நியாயமற்றது என்று பாதிக்கப்பட்டவர்களால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை ஆராய்ந்த கொழும்பு மாவட்ட நீதிவான், எதிர்வரும் 29ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் தடையுத்தரவை பிறப்பித்துள்ளார். எதிர்வரும் 29ஆம் திகதி மன்றில் முன்னிலையாகி, இது தொடர்பில் விடயங்களை முன்வைக்குமாறு, மனுவின் பிரதிவாதிகளான ரணில் விக்ரமசிங்க பாலித்த ரங்கே பண்டார மற்றும் ஒழுக்காற்று குழுவின் செயலாளர் அமித்த ஜயசேகர உள்ளிட்டோருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (ம-4)



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும், புலம்பெயர்ந்து கனடா றொறன்றோவில் வசித்து வந்தவருமான அமரர் திருமதி சித்திரகலா சண்முகநாதனின் 3 ஆம் ஆண்டு நினைவாக, போரால் பாதிக்கப்பட்ட குடும்பமொன்றுக்கு புதிவண்டித் திருத்தகம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. விடியல் அமைப்பின் ஏற்பாட்டில் அண்மையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ம-19)

## சிவில் பாதுகாப்பு அலுவலருக்கு வவுனியாவில் வீடு கையளிப்பு

வவுனியா, செப். 17

வவுனியா மயிலங்குளம் பகுதியில் சிவில் பாதுகாப்பு அலுவலர் ஒருவருக்கு வீடொன்று கையளிக்கப்பட்டது.

சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ரஞ்சன் லமாஹேவால் இந்த வீடு வழங்கிவைக்கப்பட்டது. கடுமையான பொருளாதார நெருக்கடியில் வாழும் அவருக்கு சிவில் பாதுகாப்புப் படையின் நிதி மற்றும் தொழிலாளர் பங்களிப்புடன் புதிய வீடு அமைத்து வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வவுனியா சிவில் பாதுகாப்பு தலைமையகத்தின் கட்டளை அதிகாரி லெப்டினன் கேணல் சூரிய அஸ்மடல மற்றும் சிவில் பாதுகாப்பு படையின் மூத்த தளபதிகள் என பலரும் கலந்துகொண்டனர். (ம-110)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொரோனா அறிகுறிகள் ஏற்படின் மருத்துவமனைக்குச் செல்லவும்!

## கிளிநொச்சி மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிப்பு



**கிளிநொச்சி, செப். 17**

**காய்ச்சல் மற்றும் தடிமன் போன்ற அறிகுறிகள் இருப்பவர்கள் தனியார் கிளினிக் நிலையங்களில் மருந்துகளைப் பெறுவதை விட மருத்துவமனைகளுக்கு சென்று கொரோனாப் பரிசோதனை செய்துகொள்ளவேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சரவணபவன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மக்கள் தடிமன் மற்றும் காய்ச்சல் போன்ற அறிகுறிகள் காணப்படின் உடனடியாக அருகில் உள்ள கிளினிக் நிலையங்களுக்கு சென்று மருந்துகளைப் பெற்று வருகின்றனர்.

அவர்களில் சிலருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆரம்பத்திலேயே இவ்வாறான அறிகுறிகள் இருப்பவர்கள் மருத்துவமனைக்குச் சென்று கொரோனாப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

அதனை விடுத்து அருகில் உள்ள கிளினிக் நிலையத்துக்குச் சென்று மருந்துகளைப் பெற்று குடித்துவிட்டு நோய்த் தாக்கம் அதிகரிக்கும்போது மருத்துவமனையை நாடுவதால் எந்த முன்னேற்றமும் ஏற்பட்டுவிடப்போவதில்லை.

கிளிநொச்சியில் நாளாந்தம் 200க்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட இடத்தில் தற்போது 100 தொற்றாளர்களே அடையாளம் காணப்படுகின்றனர்.

இது வருகின்ற நாள்களில் இன்னும் குறைவடையும். அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றோம் என்றார். (ஐ-6)



# ஓட்டமாவடி மயானத்தில் 2,800 சடலங்கள் அடக்கம்

மட்டக்களப்பு, செப். 17

மட்டக்களப்பு ஓட்டமாவடி மயானத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் 2 ஆயிரத்து 800க்கும் மேற்பட்ட சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

அதேவேளை கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு மேலும் சில இடங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. அவற்றுக்கு இதுவரையில் அனுமதி கிடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-ரி1)

# தடுப்பூசி பெற்றிராத 76 வீதமானோரே சாவு




கொழும்பு, செப். 17

கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களில், 76 வீதமானோர், எந்தவிதமான தடுப்பூசிகளையும் பெற்றுக் கொள்ளவில்லை என்று சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப சேவை கல்வி மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களில் 18 வீதமானோர் ஒரேயொரு தடுப்பூசியை மட்டுமே பெற்றுள்ளனர். தடுப்பூசியை முழுமையாகப் பெற்றுக்கொண்டிருந்தவர்களில் 6 வீதமானோரே உயிரிழந்துள்ளனர். எனினும் அவர்கள், பல்வேறு தொற்றா நோய்களாலும், நீண்டநாள் நோய்களாலும் பாதிக்கப்பட்டிருந்தவர்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)



# கொரோனாவை ஒழிப்பதற்காக ஒருவாரம் பிரித் ஓதும் நிகழ்வு!

அநுராதபுரம், செப். 17

கொரோனாத் தொற்றை முற்றுமுழுதாக இல்லாது ஒழிக்கவேண்டி அநுராதபுரம் மிரிசவெட்டிய விகாரையில் ஒருவாரம் பிரித் ஓதும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

அட்டமஸ்தானாதிபதி கலாநிதி பல்லேகம சிறிநிவாச தேரர் மற்றும் ருவனவெலி சைத்தியாராமாதிகாரி பல்லேகம ஹேமரதன தேரர் ஆகியோரின் அனுசரணைக்கமைய மிரிசவெட்டிய ரஜமஹா விகாராதிபதி கலாநிதி ஈதல்வெடுனுவெவே ஞானதிலக தேரர் இந்த பிரித் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தார்.

அரசுக்கும், சுகாதாரத் துறை மற்றும் பாதுகாப்புத் துறையில் சேவையாற்றும் அனைவருக்கும், நாட்டு மக்கள் மற்றும் உலகவாழ் மக்கள் அனைவரது நலனுக்காகவும், கொரோனாத் தொற்று முற்றாக இல்லாதொழிக்கப்பட வேண்டியும் இந்த பிரித் நிகழ்வு இடம்பெற்றதாக மிரிசவெட்டிய ரஜமஹா விகாராதிபதி வணக்கத்திற்குரிய கலாநிதி ஈதல்வெடுனுவெவே ஞானதிலக தேரர் தெரிவித்தார். (ம)



# நந்தினி சேவியர் காலமானார்

மூதூர், செப். 17

ஈழத்தின் மூத்த எழுத்தாளர் நந்தினி சேவியர் (வயது 72) நேற்றுக் காலமானார்.

யாழ்ப்பாணம் மட்டுவில் சாவக்கச்சேரியில் பிறந்த இவர், திருகோணமலையை வசிப்பிடமாகக் கொண்டவர். கடந்த 50 வருடங்களுக்கு மேலாக இலக்கியத்துக்காகப் பணியாற்றியுள்ளார்.

கொடகே தேசிய சாகித்திய விருது, கிழக்கு மாகாண முதலமைச்சர் விருது, கலாபூசணம் விருது ஆகிய உயர் விருதுகளையும் பெற்றுள்ளார். இவர் :அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்', 'நெல்லிமரப் பள்ளிக்கூடம்' உள்ளிட்ட சிறுகதைத் தொகுப்புக்களையும் எழுதியுள்ளார். (ம-4,40)

# சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினருக்கு கொரோனா

கொடிகாமம்,செப். 17

சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையின் மாதாந்த அமர்வு இடம்பெறவிருந்த நிலையில் இரண்டு நாள்களாக இலேசான காய்ச்சல் அறிகுறிகள் காணப்பட்டதால் அந்த உறுப்பினர் தானாகவே முன்வந்து பரிசோதனை மேற்கொண்டார்.

அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. (ஐ-159)

### கொரோனாவால் இறப்போரின் சடலங்களின்

# போக்குவரத்துச் செலவுகளைப் பொறுப்பேற்றது 'ரொறன்ரோ மனிதாபிமானத்தின் குரல்' அமைப்பு

கிளிநொச்சி, செப். 17

கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி மரணமடைந்தவர்களின் சடலங்களை மின்தகன நிலையங்களுக்கு கொண்டுசெல்வதற்குரிய முதற்கட்ட நிதியுதவி ரொறன்ரோ மனிதாபிமானத்தின் குரல் அமைப்பின் ஊடாக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைப் பணிப்பாளரிடம் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மின்தகன மயானம் இல்லாத சூழலில், கொரோனாப் பெருந்தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை வவுனியா (பூந்தோட்டம்), கெக்கிராவ, அநுராதபுரம், பொலனறுவை உள்ளிட்ட பகுதிகளுக்கு கொண்டுசெல்வதற்கு இறந்தவர்களின் உறவினர்களிடமிருந்தே பணம் அறவிடப்பட்டு வருகின்றது.

கொரோனாவால் தொழில் வாய்ப்புக்களையும், வருமான மூலங்களையும் இழந்து பொருளாதார ரீதியாக கடும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ள கிளிநொச்சி மாவட்ட மக்களின் நலன் கருதி, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் ரொறன்ரோ மனிதாபிமானத்தின் குரல் அமைப்புக்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாகவே இந்த உதவித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ம-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லொஹான் ரத்வத்த மீது ஒழுக்காற்று நடவடிக்கை

கொழும்பு, செப். 17

சிறிலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பின ரான இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பெரமுன அறிவித்துள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச இத்தாலியிலிருந்து நாடு திரும்பியவுடன் இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்படவுள்ளது.

சிறைக்கைதிகளை துப்பாக்கியால் மிரட்டினார் என்ற குற்றச்சாட்டு லொஹானுக்கு எதிராக முன் வைக்கப்பட்டுள்ள நிலையில், குற்றச்சாட்டை ஏற் கும் வகையில் அவர் தனது பதவியை விட்டு விலகியுள்ளார். லொஹானுக்கு எதிராக பல்வேறு விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதி காரிகள் சென்றுள்ளனர்.

அங்குள்ள அதிகாரிகள் மற்றும் சிறைக்கைதி களிடம் மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி கள் வாக்குமூலம் பெற்றுள்ளனர் என்று தெரிவிக் கப்படுகின்றது. (ம-4)

## லொஹானின் பதவி விலகல் சர்வதேசத்தை ஏமாற்றும் சதி

கொழும்பு, செப். 17

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தனது பத வியை விட்டு விலகியுள்ளமை சர்வதேசத்தை ஏமாற்றுவ தற்கான சதி நடவடிக்கை. எனவே அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் முறையாக விசாரணை நடத்தி சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராஜாங்க அமைச்சர் சிறைச்சாலைக் கைதிகளை மிரட் டிய சம்பவம், உள்ளூர் மற்றும் சர்வதேச அளவில் விமர் சிக்கப்பட்டுவருகின்றது. அந்த எதிர்ப்பைத் தவிர்ப்பதற்கா கவே அவர் பதவி விலகியுள்ளார். அவர் குற்றவியல் வற்புறுத்தல் மற்றும் மிரட்டல் ஆகியவற்றை தெளிவாகச் செய்துள்ளார். பதவிவிலகல் மூலம் அவர் மீது சுமத்தப் பட்ட குற்றச்சாட்டுகள் ஏற்றுக்கள்ளப்பட்டுள்ளன. எனவே இந்தச் சம்பவத்திலிருந்து அவரை விடுவிக்கமுடியாது. கைதிகளின் சார்பாக தற்போதைய அரசு மனிதாபிமான மற்ற கட்டாயக் கொள்கையைப் பின்பற்றுகின்றது என் பதை இந்த நிகழ்வு நிரூபிக்கின்றது - என்றார். (ம-4)

## அரசை சங்கடப்படுத்த நான் விரும்பவில்லை!

### மனந்திறந்தார் லொஹான்



கொழும்பு, செப். 17

அரசை சங்கடப்படுத்த விரும்பாத காரணத்தா லேயே நானாகவே பதவி விலகினேன் என்று இரா ஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரி வித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

சிறைச்சாலைகள் அமைச்சு என்னிடம் ஒப்படைக்கப் பட்டபோது, அது ஒரு பெரிய நெருப்புக் குவியலாக இருந்தது. குறுகிய காலத்தில் தீயை அணைத்து, சிறைச்சாலைகளை ஒரு நிலையான இடத்துக்குக் கொண்டுவரமுடிந்தது. அதனால் இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து விலகியமை எனக்கு வருத்தமளிக்கவில்லை.

என்னைப் பற்றி வெளியான சில ஊடக அறிக்கை களால் அரசுக்கு சங்கடமாக இருக்கும் என்ற கார ணத்தால் பதவி விலகினேன். ஜனாதிபதி என்னை நம்பி சிறைச்சாலைகள் அமைச்சை ஒப்படைத்தார். இதயத்தின் ஆழத்தில் இருந்து அவருக்கு நன்றி தெரிவிக்கின்றேன். அமைச்சராக இருந்த காலத்தில் எனக்கு ஆதரவளித்த அனைத்து அதிகாரிகளுக்கும், மற்றவர்களுக்கும் நன்றி - என்றார். (ம-4)

# லொஹான் ரத்வத்தவை உடனே கைது செய்க!

### சி.ஐ.டியில் முறைப்பாடு முன்வைப்பு



**கொழும்பு, செப்.17**

**அநுராதபுரம் மற்றும் வெலிக்கடை சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் பொறுப்புக்கூறவேண்டிய அனைவரும் கைதுசெய் யப்படவேண்டும் என்று சி.ஐ.டியில் நேற்று முறைப்பாடு முன்வைக் கப்பட்டுள்ளது.**

சிறைக்கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பினரால் இந்த முறைப்பாடு தாக்கல் செய் யப்பட்டுள்ளது.

இந்தச் சங்கத்தின் தலைவர் சட்டத் தரணி சேனக பெரேரா தெரிவித் துள்ளதாவது

மிகவும் பாரதூரமானதொரு குற் றத்தையே இராஜாங்க அமைச்சர் செய்துள்ளார். ஆயுத சட்டத்தின் கீழ் அவரை விரைவில் கைது செய்யுமாறு கோரியுள்ளோம். அவர், பதவி விலகுவது மட்டும் போதாது, உரிய நடவடிக்கை எடுக் கப்படவேண்டும்." என்றார்.

இந்தச் சம்பவத்துக்கு பொறுப்புக் கூறவேண்டியவர்கள் மற்றும் இதன் பின்னணி தொடர்பிலும் ஆராயப்பட வேண்டும் எனவும் முறைப்பாட்டா ளர்கள் கோரியுள் ளனர்.

அநுராதபுரம் சிறைச்சாலைக்கு கடந்த 12 ஆம் திகதி சென்றிருந்த இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தமிழ் அரசியல் கைதிகள் சிலரை முழந்தாளிடவைத்து துப் பாக்கி முனையில் உயிர் அச்சுறுத் தல் விடுத்தார் எனவும், வெலிக் கடை சிறைச்சாலையிலும் அவர் மிக மோசமாக நடந்துகொண்டுள் ளார் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டது.

இதற்கு பல தரப்பினரும் எதிர்ப்பு களை வெளியிட்டுவந்த நிலை யில், இராஜாங்க அமைச்சர் நேற்று முன்தினம் பதவி துறந்திருந்தார். (எ-44)

## லொஹான் விவகாரம் எவரும் முறையிடவில்லை

### பொலிஸார் தெரிவிப்பு



கொழும்பு, செப். 17

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த உள்ளிட்ட குழுவினர் மதுபோதையில் அநுரா தபுரம் மற்றும் வெலிக் கடைச் சிறைச்சாலை களுக்குள் சென்று அடாவடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பில், இதுவரை எந்த முறைப்பாடுகளும் பதிவாகவில்லை என்று பொலிஸ் ஊடகப் பேச்சா ளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் மற்றும் வெலிக்கடை பொலிஸ் நிலை யங்களில் இது தொடர்பில் ஏதேனும் முறைப்பாடு கள் பதிவாகி உள்ளதா என்று ஆராயப்பட்டுள்ளது. எனினும் இன்றுவரை இது தொடர்பில் எவரும் முறைப்பாடு பதிவு செய்யவில்லை.

அதேவேளை, குறித்த சம்பவத்தால் லொஹான் ரத்வத்த தனது பதவியிலிருந்து விலகியுள்ளார். அத னால் சம்பந்தப்பட்ட சிறைச்சாலை அதிகாரிகள் சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்ய வாய்ப் புள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

## லொஹான் விவகாரத்தை மூடிமறைப்பதற்கு முயற்சி

கொழும்பு, செப். 17

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை துப்பாக்கி முனையில் அச்சு றுத்திய இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் அத்துமீறிய செயற்பாட்டை சிறைச்சாலைகள் திணைக்கள மும், அமைச்சும் மூடிமறைக்க முயற்சிக்கின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சிறைச்சாலைகள் ஆணையா ளர் நாயகம் துஷார உபுல்தெனிய மற்றும் சிறைச்சாலை அமைச்சின் ஊடகப்பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்கவிடம் ஊடகங்கள் கேள்வி எழுப்பியிருந்தன. எனினும், அவ்வா றான சம்பவங்கள் எதுவும் நடக்கவில்லை என்று அவர்கள் பதிலளித்துள்ளனர்.

எனினும் நடந்த சம்பவத்தைப் பொறுப்பேற்று லொஹான் ரத்வத்த பதவிவிலகியுள்ளார். ஆனால் துஷார உபுல்தெனிய மற்றும் சந்தன ஏக்கநாயக்க ஆகியோர் சம்பவத்தை மூடி மறைக்கவே முயற்சித்துள்ளனர். இராஜாங்க அமைச்சுப் பதவியை விட்டு லொஹான் ரத்வத்த விலகியுள்ள நிலை யில், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய எவ்வாறு பதவியில் தொடர முடியும் என்று மனித உரிமை ஆர்வலர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ம-4)



## முறைப்பாடளித்தால் லொஹான் மீது சட்டம் பாயும்

### பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, செப். 17

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவுக்கு எதி ராக, எவராவது முறைப்பாடு அளித்தால்,சட்ட நடவடிக்கை எடுக்கத் தயாராக உள்ளோம் என்று பொதுப்பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

வெலிக்கடை மற்றும் அநுராதபு ரம் சிறைச்சாலைகளுக்குள் மதுபோதையில் அத்துமீறி நுழைந்த அமைச்சர் இரண்டு கைதிகளை துப்பாக்கி முனை யில் மிரட்டினார் என்று தெரிவிக் கப்படுகின்றது.

இது தொடர்பில் பொதுப் பாது காப்பு அமைச்சர், ரியர் அட்மிரல் (ஓய்வு) சரத் வீரசேகர தெரிவிக் கையில்:

சிறை வளாகங்களுக்குள் ஆயு தங்களைப் பயன்படுத்துவதற்கு எதிராக அமைச்சு நடவடிக்கை எடுக்க முடியும். அவர் பயன்படுத் திய துப்பாக்கி, உரிமம் பெற்றது என்று நான் நினைக்கிறேன். எவ்வாறாயினும், இந்தச் சம்ப வங்கள் தொடர்பாக எவராவது முறைப்பாடு அளித்தால், சட்டப் படி நாங்கள் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும். என் றார்.

அதேவேளை, லொஹான் ரத் வத்த வெலிக்கடை மற்றும் அநு ராதபுரம் சிறைச்சாலை வளா கங்களில் நடந்த சம்பவங்க ளுக்கு பொறுப்பேற்றுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-4)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## கண்துடைப்புகள் பலவிதம்!

இலங்கையின் உள்ளக விவகாரங்களில் வெளிநாட்டின் தலையீட்டை அரசு அனுமதிக்காது என்று திட்டவட்டமாக அறிவித்துள்ளார் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 48ஆவது கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது. இந்தக் கூட்டத் தொடரிலேயே இலங்கையின் உள்ளக விவகாரங்களில் சர்வதேசத்தின் தலையீட்டுக்கு இம்மிக்கும் இடமின்றி திட்டவட்டமாக மறுத்த வெளிவிவகார அமைச்சர், இலங்கை தனது உள்ளக விசாரணையை இதய சுத்தியுடன் முன்னெடுத்து வருகின்றது என்பதான விம்பத்தைத் தெளிவாகவே தோற்றுவித்துள்ளார்.

காணாமல்போனோர் அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம் என்பன இலங்கை அரசால் அமைக்கப்பட்டு, போரின் பின்னரான நீதியை நிலைநாட்டும் வகையில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அத்துடன், பெரும் போர்க் குற்றங்களுடன் தொடர்புடைய முன்னாள் விடுதலைப் புலிகள் 16 பேர் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் பெயரில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் இவையெல்லாம் இந்த அரசின் நீதியை நோக்கிய செயற்பாடுகள் என்றும் சான்றளித்துள்ளார் அமைச்சர் பீரிஸ்.


ஜி.எல்.பீரிஸ் மேற்கத்தய தேசங்களுக்குப் பழக்கமான முகம். ஐரோப்பாவின் நண்பன். எனவே வெளிவிவகார அமைச்சராக அவரை நியமித்த கோத்தாபய அரசின் நகர்வும், உப்புச்சப்பில்லாமல் அவசர கதியில் அமைக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட அலுவலகங்களும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையையும் மேற்கத்திய நாடுகளையும் ஏமாற்றும் செயல் என்பது அனைவரும் அறிந்ததுதான். அது தற்போது அச்சுப்பிசகாமல் அப்படியே நிறைவேற்றப்பட்டுள்ளது. ஜி.எல்.பீரிஸிடம் இருந்து வந்த வார்த்தைகளைப் பொறுத்தவரையில் இதைத்தாண்டிச் சிந்திக்க ஒன்றுமில்லை.

ஆனால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையும், அதன் ஆணையாளரும் இந்த விவகாரத்தை எவ்வாறு கையாளப்போகின்றனர் என்ற கேள்விக்குரிய பதில்தான் தமிழர்களுக்குத் தற்போது தேவை.

காணாமல்போனோர் தொடர்பான அலுவலகம் இலங்கை அரசால் சர்வதேசத்தின் காதில் பூ சுற்றுவதற்காக அமைக்கப்பட்டது என்பது தமிழர் தாயகத்தில் கடந்த பல காலமாக இருந்துவரும் குற்றச்சாட்டுத்தான். பெயர்ப்பலகைகூட அந்த அலுவலகத்துக்கு முறையாக அமைக்கப்பட்டிருக்கவில்லை. தவிர, காணாமல்போனோர் அலுவலகத்தின் ஆணையாளராக இராணுவ அதிகாரியே உள்ளார். இறுதிப்போரின்போது பெருமளவான மக்கள் காணாமல் ஆக்கப்பட்டமையின் பின்னணியில் இராணுவத்தினரே காரணமாக உள்ளனர் என்ற குற்றச்சாட்டு காணாமல்போனோரின் உறவினர்களால் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், இராணுவ அதிகாரியையே அந்த அலுவலகத்தின் ஆணையாளராக நியமித்தமையில் உள்ள குறைந்தபட்ச தர்க்கத்தையாவது சர்வதேசம் புரிந்துகொள்ளவேண்டும்.

தான் சார்ந்த தரப்புக்கு எதிரான குற்றங்களை அவர் ஏற்றுக்கொள்வாரா?, அவ்வாறு ஏற்றுக்கொண்டாலும் அதை விசாரிப்பாரா?, அவ்வாறு விசாரித்தாலும் அதில் வெளிப்புறத் தலையீடுகள் இல்லாமல் இதய சுத்தியுடன் அந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படுமா? இந்தக் கேள்விக்குரிய யதார்த்தமான பதில்கள் எவையோ அவைதான் அந்த அலுவலகத்தின் மீதான நம்பகத்தன்மை.

சர்வதேசத்தை கொழும்பு இவ்வாறான கண்துடைப்பு நாடகத்தால் ஏமாற்றுவது இதுவொன்றும் முதல்முறையல்ல. இது தசாப்தப்பழசு. ஆனால், மீண்டும் மீண்டும் இவ்வாறு ஏமாறுவதும் வாய்ப்பளிப்பதுமாக சர்வதேசம் இருப்பது தமிழர்களின் சாபக்கேடே தவிர வேறொன்றும் இல்லை.




# வெளிமாவட்ட பாஸ்களை பயன்படுத்தி மண்ணகழ்வு

### கிளிநொச்சி மாவட்டச் செயலர் தெரிவிப்பு



**கிளிநொச்சி, செப். 17**

**வெளிமாவட்டங்களில் பெறப்பட்ட பாஸ்களை இங்கு கொண்டுவந்து, அவற்றைப் பயன்படுத்தி மணல் அகழ்வில் மணல் மாபியாக்கள் ஈடுபடுகின்றனர் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் அண்மைய நாள்களாக மணல் கடத்தல் தொடர்சியாக இடம்பெற்று வருகின்றது. இந்த நிலையில் அதனைக் கட்டுப்படுத்த எவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளபடுகின்றது என்பது தொடர்பாகக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மணல் அகழ்வு தொடர்பாக உரிய தரப்புக்களுக்கு தெரியப்படுத்திய வண்ணம் உள்ளோம். அத்துடன் மணல் அகழ்வுக்கு அனுமதிகள் வழங்குவதில்லை அது மாத்திரம் அல்லாது வெளிமாவட்டங்களில் அனுமதிகளைப் பெற்று அங்கிருந்து மணலைக் கொண்டுவருவது போல் இங்கு மணலைப் பெற்று வீதியில் செல்வதால் பொலிஸார் அவர்களை கைதுசெய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

தற்போது அனுமதிகள் வழங்கப்படுகின்ற போது எங்கிருந்து மணலைப் பெற்று எங்கு கொண்டு செல்கின்றனர் என்ற விவரங்களை உள்ளடக்குமாறு தெரியப்படுத்தி உள்ளோம். அவ்வாறு நடைமுறை வரும்போது இந்த மணல் கடத்தலை கட்டுப்படுத்த அது வழியாக அமையும்.

மாவட்டத்தில் மிக அதிகளவான மணல் அகழப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறான இடங்களில் இராணுவத்தினர் சோதனைச் சாவடிகளை அமைத்திருக்கின்றனர். பொலிஸாரும் சில இடங்களில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வெளிமாவட்டங்களில் வழங்கப்படும் அனுமதிகளே எமது மாவட்டத்தில் மணல் கொள்ளை இடம்பெறக் காரணம் - என்றார்.

(ஐ-6)

# தமிழருக்கு எதிரான ஆவணங்களில் நான் கையெழுத்து இடவேயில்லை!

### மட்டக்களப்பு மாநகர முதல்வர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, செப். 17

**தமிழ் மக்களுக்கு எதிரான எந்தவிதமான ஆவணத்திலும் நான் கையெழுத்திடுவதில்லை. அவர்களுக்கு எதிராக எப்போதும் செயற்பட்டதும் இல்லை என்று மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்துள்ளார்.**

அவர் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் போர்க் குற்றங்கள் தொடர்பாக விசாரணை செய்யப்பட வேண்டும் என்று ஜெனிவாவுக்கு அனுப்பப்பட்டது என்று கூறி சமூக ஊடகங்களில் வெளியாகும் கடிதத்தில் நான் கையெழுத்திட்டேன் என்று வெளிவரும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை.

இலங்கை அரசின் பொறுப்புக்கூறல் தன்மைக்கு மேலும் இறுக்கமான ஒரு செயற்பாடாகவே ஐ.நா. ஆணையாளரின் கருத்தை நான் பார்க்கின்றேன்.

**இலங்கை அரசு மிகவும் சிக்கலான ஒரு நிலைப்பாட்டுக்குத் தள்ளப்பட்டுள்ளது** என்பது மிகத் தெளிவாக விளங்குகின்றது. தமிழ் தேசியக் கூட்டமைப்பால் அனுப்பப்பட்ட ஆவணங்களும் **ஐ.நாவில் பரிசீலிக்கப்பட்டுள்ளன - என்றார். (ம-4)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்தை ஏமாற்றாது பொறுப்புக்கூறல் அவசியம்

## அரசுக்கு குணவன்ச தேரர் அறிவுரை



**கொழும்பு, செப். 17**

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சர்வதேசம் எழுப்பும் கேள்விகளுக்குப் பதிலளிகாமல் இனியும் மூடி மறைக்க முடியாது. இது தொடர்பில் தெளிவாக விளக்கமளிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது என்று எல்லே குணவன்ச தேரர் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் தேசிய மட்டத்தில் எழும் அழுத்தங்களை மூடி மறைப்பதைப் போன்று சர்வதேசத்தையும் ஏமாற்ற முடியாது.

உயிர்த்தஞாயிறு குண்டுத்தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் நியாயத்தைக் கோரிநிற்கின்றனர். இதனைத் தவறென்று குறிப்பிட முடியாது. தாக்குதல் தொடர்பில் முறையான விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

குண்டுத்தாக்குதலின் பிரதான சூத்திரதாரி யார் என்பதை வெளிப்படுத்த வேண்டும் என்பதையே அனைத்துத் தரப்பினரும் கோருகிறோம். தலதா மாளிகைக்கு குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்துக்கு இதுவரையில் நீதி கிடைக்கப் பெறவில்லை. அதனைப் போன்று இந்தச் சம்பவத்தையும் மூடி மறைக்கக் கூடாது. உண்மையை வெளிப்படுத்தத் தாமதிப்பது மாறுபட்ட சந்தேகத்தை ஏற்படுத்தும்- என்றார். (ம-4)

# நான்காவது மாடியிலிருந்து வீழ்ந்த ஊழியர் படுகாயம்

கொழும்பு, செப். 17

கொரோனா சிகிச்சை நிலையத்தின் நான்காவது மாடியில் இருந்து, சுகாதார ஊழியர் ஒருவர் தவறி விழுந்துள்ளார்.

இந்தச் சம்பவம் பண்டாரவளை கொரோனா சிகிச்சை நிலையத்தில் இடம்பெற்றுள்ளது. அங்கு கடமையாற்றும் ஊழியர் ஒருவரே இவ்வாறு விழுந்துள்ளார். அவர் அங்கு தற்காலிகமாக மூடப்பட்டிருந்த கதவைத் திறக்க முற்பட்டபோது தவறி விழுந்துள்ளார். சம்பவத்தில் படுகாயமடைந்த அவர் தியத்தலாவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ம-4,ரி2)

# ஜனநாயகத்தை மீறுகிறது அரசு

## பகீர் மார்கர் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 17

இலங்கை ஜனநாயகத்தை மதிக்காத நாடாக வகைப்படுத்தப்படாமல், இருக்க உரிய நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பகீர் மார்கர் தெரிவிக்கையில்:

சர்வதேச சமூகத்தின் இலங்கை எதிர்கொள்ளும் பல பிரச்சினைகள் மோதலுடன் தொடர்புடையவை அல்ல. மாறாக ஜனநாயகத்தின் அழிவே. இலங்கை ஜனநாயகத்தை மதிக்காத மற்றும் நிலைநாட்டாத நாடாக வகைப்படுத்தப்படுவதைத் தடுக்க அரசு விரைவான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

நாகரிக உலகில் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் மிகவும் மதிக்கப்படுகின்றன. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் எழுப்பப்பட்ட அனைத்துப் பிரச்சினைகளும் குடிமக்களின் உரிமைகள் ஒடுக்கப்படுவது தொடர்பாக நாட்டில் நிலவும் பிரச்சினைகள். இன்று பல அரசியல் மற்றும் சமூக ஆர்வலர்கள் நியாயமற்ற முறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் - என்றார். (ம-4)

# மருத்துவமனையின் ஊழியர் மீது சுடுதண்ணீரை ஊற்றிய சிப்பாய்

கொழும்பு, செப். 17

மருத்துவமனை ஊழியருடன் ஏற்பட்ட முரண்பாட்டில், இராணுவச் சிப்பாய் ஒருவர், ஊழியர் மீது சுடுதண்ணீரை ஊற்றியுள்ளார். இந்தச் சம்பவம் கராப்பிட்டிய மருத்துவமனையில் நடந்துள்ளது. எரிகாயங்களுக்கு உள்ளான மருத்துவமனையின் ஊழியர் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அநுராதபுரம் சாலியவெள முகாமில் பணியாற்றி வரும் இராணுவச் சிப்பாய், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் தனது மகனுக்கு, சுடுதண்ணீர் பெற்றுக் கொள்வதற்காக மருத்துவமனையின் சிற்றுண்டிச் சாலைக்குச் சென்றுள்ளார்.

அதன் போது மருத்துவமனையின் ஊழியர் ஒருவரும் சிற்றுண்டிச் சாலைக்குச் சென்றுள்ளார். அங்கு இருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. கோபமடைந்த இராணுவச் சிப்பாய் ஊழியரின் முகத்தில் சுடுதண்ணீரை ஊற்றினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)




# விமான நிலையங்களில் வசதிகளை ஏற்படுத்துக

## அமைச்சர் பிரசன்ன உத்தரவு

கொழும்பு, செப். 17

விமான நிலையங்களில் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதால், அங்கு வசதிகளை ஏற்படுத்துமாறு சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, விமான நிலைய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கொரோனாத் தொற்றுக்குப் பின்னர் இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எதிர்காலத்தில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும். எனவே விமான நிலையத்தில் வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இலங்கைக்கு வருகை தரும் இலங்கையர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் விமான நிலைய வளாகத்தை விட்டு வெளியேறும் பகுதி, பொருள்களை எடுத்துச் செல்லும் பகுதி, சுங்கச் சேவைகளுக்கான சாவடிகள் உள்ளிட்ட வசதிகளை மேம்படுத்துமாறு அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்தக் காலகட்டத்தில், தொற்றுநோய் கட்டுப்பாடு தொடர்பான சுகாதாரப் பரிந்துரைகளுக்கு இணங்க விமான நிலையத்தை பராமரிப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# வாவியிலிருந்து சடலம் மீட்பு



மட்டக்களப்பு, செப். 17

மட்டக்களப்பு வலையிறவு வாவியிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டது.

வவுணதீவு காயமடுப் பிரதேசத்தைச் சேர்ந்த யோகநாதன் ராயூ (வயது -24) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தகவலறிந்த பொலிஸார் வலையிறவு வாவியின் நடுப்பகுதியில் மிதந்த சடலத்தை, படகு மூலம் கரைக்குக் கொண்டு வந்தனர். சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்புப் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள் ளது (ம-ரி1)

# வனவிலங்குகளின் பாதுகாப்பு: கென்யாவுடன் ஆலோசனை

கொழும்பு, செப். 17

இலங்கையில் வனவிலங்குகளைப் பாதுகாப்பது தொடர்பில், கென்யாவுடன் இலங்கை ஆலோசனை நடத்தியுள்ளது.

கென்யாவுக்குப் பயணித்துள்ள அமைச்சர் சி.பி.ரத்நாயக்க, கென்ய வனவிலங்கு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் நஜிப் பலாலாவைச் சந்தித்த போது. வனவிலங்கு வனவளங்கள் மற்றும் சர்வதேச சுற்றுலா போன்ற பொருளாதார நடவடிக்கைகளின் மூலம், அந்த வளங்களைச் சந்தைப்படுத்துவதற்கான தேசிய உத்திகளில் பல ஒற்றுமைகள் இரு நாடுகளுக்கும் உள்ளன என்று இலங்கை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

வனவிலங்குகள் இலங்கையின் சுற்றுலாவுக்கான முக்கிய ஈர்ப்புக்களில் ஒன்றாக விளங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

வனவிலங்குகள் மற்றும் வனவளங்களைப் பாதுகாப்பதன் மூலம் கென்யாவில் பல்லுயிர்ப் பெருக்கத்தை வெற்றிகரமாக வளர்ப்பதனைப் பாராட்டிய அமைச்சர் ரத்நாயக்க, இருதரப்புத் திட்டத்தின் கீழ் அனுபவம் மற்றும் அறிவு ஆகியவற்றால் இலங்கை பயனடைய முடியும் என்றும் தெரிவித்தார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள்

**மேடம்:** கடன் தீர்க்கும் வாய்ப்பு உண்டாகும். மனதில் அமைதி நிலவும். குடும்பத்தில் நன்மை உறுதியாவதற்குப் பொறுமை தேவை. தேவையான உதவி கிடைப்பதில் தாமதம் இருக்கலாம்.

**இடபம்:** விருப்பம் நிறைவேறுவதில் சிறு தாமதம் இருக்கும். பணியில் இருந்த அழுத்தங்கள் படிப்படியாக விலகும். எதிர்பாராத பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**மிதுனம்:** உங்களின் பணத்தேவை உடனுக்குடன் பூர்த்தியாகும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த நல்ல செய்தி வரும். வாங்க வேண்டும் என்று ஏங்கிய ஒரு பொருள் கிடைக்கும்.

**கடகம்:** தொழில், பணியில் சிறிய வளர்ச்சி ஏற்படும் நாள். எதிர்பார்த்த உதவி சரியான நேரத்தில் கிடைக்கும். தாய்வழி உறவுகளுடன் அன்பாகப் பேச வாய்ப்பு வரும்.

**சிம்மம்:** நல்லவர்களின் உதவி கிடைக்கப் பெறுவீர்கள். மனம் நிறையும். சொத்து சம்பந்தமான பிரச்சினையில் அதிக மாற்றம் இருக்காது. உங்களை நம்பியோரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** வாழ்வில் முன்னேறப் புதிய முயற்சியைக் கையாளுவீர்கள். பெண்கள் எடுக்கும் முயற்சிகளில் சிறு முன்னேற்றம் ஏற்படும். உதவிகளும், ஆதரவும் கிடைக்கும்.

**துலாம்:** ஆதாயம் உண்டு. கவர்ச்சி அம்சம் அதிகரிக்கும். பணியிட சூழ்நிலை சாதகமாக இருக்கும். உங்களின் செல்வாக்கு கூடும். குடும்பச் சூழல் மகிழ்ச்சி தரும் வகையில் இருக்கும்.

**விருச்சிகம்:** தேவையான உதவிகளும், சலுகைகளும் கிடைக்கும். எடுத்த பணி ஒன்று எளிதாக முடியும். செலவு கூடும். புதிய வியாபார வழிவகை கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

**தனுசு:** நீங்கள் செய்யும் எந்த ஒரு விடயத்திலும் அதிக கவனம் தேவை. பணியில் அலட்சியம் வேண்டாம். பேச்சில் கவனம் தேவை. கோபத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்.

**மகரம்:** செயல்பாடுகளில் பொறுமையாக இருக்கவேண்டும். பதற்றமின்றிச் செயல்பட்டால் எந்தவித பிரச்னையும் இல்லை. சோம்பலும் நிதானப்போக்கும் இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**கும்பம்:** புதிதாக அறிமுகமாகும் நபரிடம் கவனமாக இருக்க வேண்டும். எவரிடமும் கோபத்தைக் காட்ட வேண்டாம். மனசஞ்சலம் ஏற்படும்.

**மீனம்:** நேற்றைய பிரச்சினை ஒன்று இன்று முடிவுக்கு வரும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. அலுவலகப் பணியில் ஒரு சந்தோஷ அதிர்ச்சி கிடைக்கும்.




## ரஜினி, அஜித்துடன் மோதும்
# சிம்புவின் மாநாடு

எதிர்வரும் தீபாவளி அன்று சூப்பர் ஸ்டார் ரஜினியின் 'அண்ணாத்த' மற்றும் தல அஜித்தின் 'வலிமை' ஆகிய திரைப்படங்கள் வெளியாக உள்ள நிலையில் சிம்புவின் 'மாநாடு' திரைப்படமும் தீபாவளி அன்று வெளியாகும் என அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டு உள்ளதால் மும்முனைப் போட்டி ஏற்பட்டுள்ளது.
சிம்பு நடிப்பில் வெங்கட் பிரபு இயக்கத்தில் வெளியாகியுள்ள படம் 'மாநாடு'. இந்தப் படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்து இறுதிக்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
இந்த நிலையில் இந்தப் படம் ஆயுத பூஜை விடுமுறை தினத்தில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் தீபாவளி தினத்தில் வெளியாகும் என படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.
எனவே வரும் தீபாவளி ரேஸில் ரஜினியின் அண்ணாத்த, அஜித்தின் வலிமையோடு சிம்புவின் 'மாநாடு' படமும் கலந்துகொள்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## தற்போது அமுலில் உள்ளவாறு லொக்டவுன்
**21.09.2021 வரை நீடிக்கப்பட்டுள்ளது.**










## twitter

**கடைநிலை ஊழியன்@**
பலூன் வியாபாரி விற்பது பலூன் அல்ல, அவரின் மூச்சுக் காற்று !!

**கோழியின் கிறுக்கல்@**
"நீதி"க்கு தலை வணங்கு!
"நிதி"க்கு கால் பிடித்து விடு!!

**கோழியின் கிறுக்கல்@**
மொபைல் நம் கையில் இருந்தால், ஊர் உலகத்தில் என்ன நடக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம். ஆனால் நம் வீட்டில் என்ன நடக்கிறது என்பதை அறிய முடியாது

# தன்னைத் தானே திருமணம் செய்து கொண்ட மொடல்



பிரேசில் நாட்டைச் சேர்ந்த மொடல் அழகி ஒருவர் தன்னைத் தானே திருமணம் செய்து கொண்டுள்ளார்.
33 வயதான கிரிஸ் கேலராவின் திருமணம் பிரேசிலில் உள்ள கத்தோலிக்க தேவாலயம் ஒன்றில் நடைபெற்றுள்ளது. இதில் நண்பர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டுள்ளனர்.
தனது இந்தத் திருமணம் குறித்து மொடல் அழகி கிரிஸ் கேலரா கூறுகையில்,
எனது வாழ்க்கையில் நான் தனியாக இருக்கப் பயப்படுவேன் , ஆனால், இப்போதுதான் நான் தனியாக இருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைகின்றேன் என்றும், பெருமிதத்தோடு கூறியுள்ளார்.
அத்துடன் எனது கடந்த காலத்தில் எதிர்கொண்ட பிரச்சினைகள், வாழ்க்கையில் ஏற்பட்ட மணமுறிவுகள் காரணமாக இந்த முடிவை எடுத்தேன்.
தனிமையில் வாழ்வது சிறந்த உணர்வு. இந்தத் தனிமையான உணர்வு மிகவும் அற்புதமாக இருக்கிறது எனவும் அதனைக் கொண்டாடும் வகையிலேயே என்னை நானே திருமணம் செய்து கொண்டுள்ளேன்.
இந்த நிலையில் கிரிஸ் கேலராவின் இந்த முடிவைப் பலரும் சமூக வலைத்தளங்களில் விமர்சித்தனர்.
இதற்கு, என்னை மற்றவர்களிடம் நிரூபிப்பதில் எந்த அர்த்தமும் இல்லை. நான் அவர்களின் கருத்துகளைப் பார்ப்பதில்லை என்று பதிலளித்துள்ளார்.
இதேவேளை,2020 ஆம் ஆண்டு பட்ரிசியா கிறிஸ்டின் என்ற ஒருவர் தன்னை தானே திருமணம் செய்து கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேர்தல் காலத்தில் வாக்காளர்களுக்கு லஞ்சம் உறுப்பினரின் பதவி பறிப்பு

## உயர்நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

**கொழும்பு, செப். 17**

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் உறுப்பினர் ஒருவர், மொனராகலை பிரதேசசபை உறுப்பினர் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.**

2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், மொனராகலை பிரதேசசபைக்கு பொதுஜன பெரமுனக் கட்சியின் ஊடாக தெரிவான டி.எம் ஹர்ஷக பிரிய திஸாநாயக்க, தேர்தலில் வாக்களிப்பதற்காக வாக்காளர்களுக்கு லஞ்சம் கொடுத்தமை நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் வனசிங் முதியன்சலாகே சாந்த, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவர் வழங்கிய லஞ்சம் காரணமாக, தனக்கு நஷ்டம் ஏற்பட்டது என்று உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

ஹர்ஷ பிரிய திஸாநாயக்க என்ற வேட்பாளர் மின்சாரம் மற்றும் நீர் இணைப்புகளுக்கு பணம் கொடுத்துள்ளதோடு, உலர் உணவுகளையும் விநியோகித்துள்ளார். வாக்காளர்களுக்கு மதுபானங்களையும் விநியோகித்துள்ளார்.

மனுதாரர் தனது வழக்கின் சாட்சியாக தகவல் அறியும் உரிமை ஊடாக உரிய ஆதாரங்களைப் பெற்றுள்ளதோடு, லஞ்சம் பெற்ற பலரும் சாட்சிகளாகக் குறிப்பி டப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உயர்நீதிமன்ற நீதிபதி ரங்க திசாநாயக்க, குறித்த பொதுஜன பெரமுன உறுப்பினர், பல்வேறு வகையான லஞ்சங்களை வழங்கியிருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளதை அறிவித்தார்.

அதற்கமைய குறித்த நபர் மொனராகலைப் பிரதேசசபை உறுப்பினர் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று நீதிபதி அறிவித்துள்ளார். (ஓ-4)



# வவுனியா மருதோடையில் கல் அகழ்வதற்கு எதிர்ப்பு

வவுனியா, செப். 17

வவுனியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மருதோடைக்குளத்துக்கு அண்மையாக கல் அகழ்வதற்கு மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இதையடுத்து கற்குவாரி உரிமையாளர்களுக்கும் மக்களுக்கும் இடையே கடந்த செவ்வாய்க்கிழமை முறுகல் நிலை ஏற்பட்டது.

இதையடுத்து, குறித்த பகுதி தொடர்பாக ஆராய்ந்து தீர்வைப் பெறும் நோக்குடன் பிரதேச செயலர் நா.கமலதாசன் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் விஸ்ணுதாசன், மேலதிக மாவட்டச் செயலர் சபர்ஜா ஆகியோர் குறித்த இடத்துக்குச் சென்று பார்வையிட்டதுடன் இது தொடர்பாக இரு தரப்பினருடனும் கலந்துரையாடியிருந்தனர்.

அதன்படி குறித்த கல் அகழ்வதற்காகக் கோரப்பட்ட பகுதியானது, கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் அளவீடு செய்யப்பட்டது. கோரிக்கை விடுக்கப்பட்ட பகுதி குளத்தின் எல்லைப் பகுதிக்குள் காணப்படுவதன் காரணமாக கல் அகழ்வதற்கான அனுமதி வவுனியா பிரதேச செயலர் நா.கமலதாசனால் மறுக்கப்பட்டது. இதையடுத்து அகழ்வு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன.

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்த தாவது:

வவுனியா மருதோடை மற்றும் வேலர் சின்னக்குளத்தின் அருகில் அரசியல்வாதியொருவரின் ஆதரவுடன் கல்அகழ்வு இடம்பெற்றுவருகின்றது. 100 அடிக்கும் மேலான ஆழமுடைய பள்ளங்கள் இவ்வாறு தோண்டப்பட்டுள்ளதால், மழை பெய்யும்போது அந்தப் பள்ளங்களுக்குள் மழைநீர் செல்கின்றதே தவிர குளங்களுக்கான நீர்வரத்துக் குறைந்துள்ளது. 120 ஏக்கர் வயற்காணி இங்குள்ளது. இரு போகமும் பயிர்ச்செய்கையை மேற்கொண்டுவந்த நாம் இந்தச் சட்டவிரோதச் செயலால் தற்போது ஒருபோகம் மட்டுமே பயிர்ச்செய்கையை மேற்கொள்ளக் கூடியதாக உள்ளது. அத்துடன் இந்தக் கல் அகழ்வு நடவடிக்கைகளால் அயல் பகுதியில் உள்ள கிணறுகளில் நீர் வற்றும் நிலை ஏற்பட்டுள்ளது - என்றனர். (ம-110)

# தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களின் வீட்டுக்கு ஆயுள்வேத மருந்துப்பொதி

கொழும்பு, செப்.17

கொரோனாத் தொற்றால் சுயதனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு ஆயுள்வேத மருந்துப்பொதி வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுதேச மருத்துவ அபிவிருத்தி கிராமிய மற்றும் ஆயுள்வேத வைத்தியசாலைகள் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சர் சிசிர ஜெயக்கொடியின் பணிப்புரைக்கமைய, ஆயுள்வேத ஆணையாளர் வைத்தியர் தம்மிகவின் வழிகாட்டலின் அடிப்படையிலும் கொரோனாவை ஒழிக்கும் தேசிய வேலைத்திட்டத்துக்கு அமைவாக இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆயுள்வேத மருந்துப் பொதியில் ஐந்து நபர்களுக்கு ஒரு வாரத்துக்குத் தேவையான சுவதாரணி, தாளிசாதிதூள், சித்தராம வட்டி, தேசந்துங் கல்க, சுதர்சன தூள், ஆவி பிடிக்க உபயோகிக்கும் எண்ணெய், தொண்டையில் பூசும் எண்ணெய் என்பன அடங்கியுள்ளன.

அதேவேளை அடிக்கடி தோடம்பழம், தேசிக்காய் போன்ற பானங்களை அருந்துதல், அதிகமான இயற்கை உணவுகளை உண்ணுதல், 8 தொடக்கம் 10 மணிவரை ஓய்வெடுத்தல், அரிசிக்கஞ்சி போன்றவற்றை அடிக்கடி அருந்துதல், சூரிய ஒளியில் 1 மணித்தியாலம் கிடைக்கக் கூடிய வகையில் இருத்தல், நாம் வசிக்கின்ற இடங்களை நன்கு காற்றோட்டம் உள்ள இடமாக மாற்றுதல் உள்ளிட்டவையும் பாதுகாப்புத் தரும்.

அதேவேளை தடுப்பூசி வழங்குதலானது உடலில் நோய் எதிர்ப்பு சக்தியைத் தோற்றுவிக்கும் ஒரு செயற்பாடாகும். இதனால் ஆயுள்வேத மருந்து வகைகளைப் பாவிப்பதனாலும் எந்தவொரு பக்க விளைவுகளும் ஏற்படாது என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (ஓ-4)



# 50 வீதமானோருக்கு இதுவரை தடுப்பூசி

கொழும்பு, செப்.17

நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 50 வீதத்துக்கும் மேற்பட்ட மக்களுக்கு கொரோனாத் தடுப்பூசிகளின் இரண்டு டோஸ்களும் செலுத்தப்பட்டுள்ளன. அதற்கமைவாக தடுப்பூசி செலுத்துதலில் இலங்கை 5 ஆவது நாடாக முன்னேற்றமடைந்துள்ளது.

இது இலங்கைக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தடுப்பூசி செலுத்தப்பட்ட நாடுகளில் சிறிய மற்றும் வறிய நாடுகள் தவிர்ந்த அமெரிக்கா, ஜப்பான், இத்தாலி, மலேசியா போன்ற நாடுகள் முக்கியமானவையாகும்.

இவற்றில் பெரும்பாலானவை ஜி7 அமைப்பின் பிராந்தியத்துக்கு உட்பட்ட நாடுகளாவதுடன், இவற்றில் 4 நாடுகள் தடுப்பூசி மருந்துவகைளைத் தயாரிக்கும் நாடுகளாகும். அதனால் தடுப்பூசி ஏற்றுவதில் முன்னேற்றமடைந்துள்ளன.

இலங்கையில் ஜனாதிபதி காட்டிய ஆர்வமும், சுகாதார மற்றும் பாதுகாப்புப் பிரிவுகளின் அர்ப்பணிப்புமே தடுப்பூசி முன்னேற்றத்துக்குக் காரணமாக இருந்தது - என்றார். (ஓ-4)

# பதவி விலகினார் மன்னப்பெரும

கொழும்பு, செப்.17

இலங்கை நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் கலாநிதி மன்னப்பெரும பதவி விலகியுள்ளார். அவர், தனது பதவி விலகல் கடிதத்தை விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவிடம் கையளித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தனிப்பட்ட காரணங்களுக்காகப் பதவி விலகியுள்ளேன் என்று மன்னப்பெரும தெரிவித்துள்ளார். (ரி2)

# இலங்கையில் மற்றொரு தீவிரவாதத் தாக்குதல்?

## ஞானசார தேரர் பரபரப்புத் தகவல்

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கையில் நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதல்களைப் போன்று, மற்றுமொரு தாக்குதல் மீண்டும் நடத்தப்படலாம் என்று பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளரான கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பாகிய நேர்காணலில் அவர் மேலும் தெரிவிக்கையில், [illegible]

**அடிப்படைவாதச் [illegible] இளைஞர்களை எந்தச் சந்தர்ப்பத்திலும்** தாக்குதலுக்குப் பயன்படுத்தமுடியும். இதுபோன்ற பயிற்சி மற்றும் போதனைகளைப் பெற்ற திரளான இளைஞர்கள் இலங்கையில் இருக்கின்றனர்.

நியூஸிலாந்தின் ஒக்லாண்டில் அண்மையில் இலங்கைப் பிரஜை ஒருவர் தாக்குதல் நடத்தியிருந்தார். அப்படியான இளைஞர்கள் இன்றும் இருக்கின்றனர். 30 வருடங்கள் போர் முடிந்த பின்னர் இதுபோன்ற குண்டு [illegible] நினைத்த காலத்தில் [illegible] **மிலேச்சத்தனமான தாக்குதல் உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்றது.**



தாக்குதல் நடத்தக்கூடிய தரப்பினர், தாக்குதல் காலம்கூட எனக்குத் தெரியும். அவை பற்றிய முழுத் தகவல்களையும் ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றேன். அவர்கள் எந்த வேளையிலும் எந்த **இடத்திலும் மற்றுமொரு தாக்குதலை நடத்தலாம் - என்றார். (ஓ-4)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினமும் 6,500,000 கிலோ அரிசிக்குத் தட்டுப்பாடு?

## விவசாயக் கூட்டமைப்பு எதிர்வு கூறல்

**கொழும்பு, செப். 17**



**இலங்கையில் தினமும் 65 லட்சம் கிலோகிராம் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என்று தேசிய விவசாயிகள் கூட்டமைப்பின் தலைவர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
அரிசி மற்றும் நெல்லுக்கு இடையே அரசு கடுமையான சிக்கலை உருவாக்கியுள்ளது. நாட்டில் பெரும் அரிசித் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புள்ளது. தினமும் [illegible]லட்சம் கிலோகிராம் அரிசிக்கு தட்[டுப்பாடு ஏற்]படக்கூடும். அரசின் செயற்[பாட்டின்] விளைவாகவே இந்த முடிவை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். நாடு திறக்கப்பட்டவுடன் இந்த நிலைமை ஏற்படும்.
நாட்டின் அனைத்துப் பொருள்களதும் விலை அதிகரித்துள்ளது. எனினும் நெல்லுக்குத் தேவையான கட்டணத்தை அரசு செலுத்துவதில்லை. இவ் அநீதியால் விவசாயிகளால் நெல் உற்பத்தியில் ஈடுபட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.
நெல் உற்பத்தி தடைப்பட்டுள்ளதால், நூற்றுக்கு 50 வீதம் அரிசி உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. முடக்கநிலை தளர்த்தப்பட்டவுடன் உணவகங்கள் திறக்கப்படும். எனவே அரிசியின் தேவையும் அதிகரிக்கும் - என்றார். (ம-4)

## சுற்றுலா விவகாரத்தில் விதிமுறை மீறவில்லை

*அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, செப். 17
சுற்றுலாத்துறையூடாக எந்தவிதமான சுகாதார விதிமுறைகளும் மீறப்படவில்லை. எனவே பொய்யான அறிக்கைளை வெளியிட்டு மக்களைக் குழப்ப வேண்டாம் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.
நாட்டுக்குள் மீண்டும் சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதால் மீண்டும் கொரோனா அச்சுறுத்தல் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.
தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறி இவர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்படுகின்றனர் என்றும் சங்கம் சு[illegible]
[illegible]
தெரிவித்துள்ள அமைச்சர், நாட்டுக்கு வருகைதரும் அனைத்து சுற்றுலாப் பயணிகளும் சுகாதார அதிகாரிகளின் மேற்பார்வையில் உள்ளனர். பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்றும் தெரிவித்துள்ளார். (ம-4)

# சேதனமுறையில் நெற்செய்கை யாழில் விழிப்புணர்வு ஊர்வலம்

யாழ்ப்பாணம், செப்.17
சேதனமுறையில் மேற்கொள்ளப்படும் நெற்செய்கை தொடர்பான விழிப்புணர்வு வாகன ஊர்வலம் யாழ்ப்பாணத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.
வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், நெல் அதிகளவு செய்கை பண்ணப்படும் பிரதேசங்களான தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளில் இந்த ஊர்வலம் நடைபெற்றது.
அரசின் தற்போதைய திட்டத்துக்கு அமைவாக, சேதனப்பசளையை தாங்களாகவே தயாரித்து பயிர்ச் செய்கையை மேற்கொள்ள வேண்டும் என்று விவசாயிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.
நெற்செய்கைக் காலத்தில் ஏற்படும் கபிலநிறத்தத்தி, வெண்முதுகுத் தத்திப் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவது எப்படி என்பது தொடர்பிலும் விவசாயிகளுக்கு



ஆலோசனை வழங்கப்பட்டது.
அத்துடன் விரைவு முறையில் உயிர் போசணை மிகு கூட்டெரு தயாரித்தல் தொடர்பிலும் செயன்முறை மூலம் விளக்கமளிக்கப்பட்டது.
அதேவேளை சௌபாக்கியத் திட்டத்தின் கீழ் நெல்லின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக நெல் மூடைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. ஆரம்ப நிகழ்வில் வடமாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார், யாழ்.மாவட்ட உதவிப்பணிப்பாளர் ஸ்ரீரங்கன் அஞ்சனாதேவி,நெற்செய்கை தொடர்பிலான போதனாசிரியர் எஸ்.நிரஞ்சன் மற்றும் மட்டுவில் பகுதிக்கான விவசாய போதனாசிரியர் ஜனுஜா சேதுலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ-4-25)

## சுத்தா கொலை: மூவர் கைது



கொழும்பு, செப்.17
போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாதாள உலகக் குழுச் செயற்பாட்டாளரான சன்ஷைன் சுத்தா கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இதுவரை மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கடந்த 3 ஆம் திகதி மிரிஸ்ஸ - ஹேன் வலவில் அமைந்துள்ள, பெண் ஒருவரின் வீட்டுக்குச் சென்று திரும்பிய அமில பிரசங்க ஹெட்டிஹேவா எனப்படும் சன்ஷைன் சுத்தா, கொட்டவில - வரக்காபிட்டியப் பகுதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.
இந்தச் சம்பவம் தொடர்பிலேயே மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஒ-4)

## 965 பேர் கைது



கொழும்பு, செப். 17
தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறினர் என்ற குற்றச்சாட்டில் நேற்று 965 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
முக்கவசம் அணியாமை மற்றும் தனியாள் இடைவெளியை பேணாமை ஆகிய குற்றச்சாட்டுகளுக்காக இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
அதேவேளை கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறினர் என்ற குற்றச்சாட்டில் இதுவரை 73 ஆயிரத்து 78 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-4)

# இத்தாலியிலுள்ள இலங்கையர்கள் பிரதமர் மஹிந்தவுடன் சந்திப்பு

உரோம், செப். 17
இத்தாலியில் வாழும் இலங்கை மக்களுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கும் இடையிலான சந்திப்பொன்று போலோக்னா நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.



எதிர்காலத்தில் மீண்டும் இலங்கைக்குத் திரும்பும் எதிர்பார்ப்புடன் காணப்படும் இத்தாலியிலுள்ள இலங்கை மக்களுக்கு இருபது ஆண்டு சேவைக்காலத்தின் பின்னர் அந்த நாட்டில் வழங்கப்படும் ஓய்வூதியத்தை தாய்நாட்டுக்குத் திரும்பிய பின்னரும் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றுத்தருமாறு அங்கு வருகைதந்திருந்த பிரதிநிதிகள் பிரதமரிடம் கேட்டுக்கொண்டனர். குறித்த முன்மொழிவு தொடர்பில் இத்தாலி அரசாங்கத்துடன் கலந்துரையாடுமாறு பிரதமர், வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸுக்கு அந்தச் சந்தர்ப்பத்திலேயே அறிவுறுத்தினார்.
ஜி-20 சர்வமத மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இத்தாலிக்கு விஜயம் செய்துள்ள பிரதமர் எதிர்வரும் [illegible] தினங்கள் அங்கு தங்கியிருந்து இராஜதந்திர சந்[திப்]புகளிலும் ஈடுபடவுள்ளார். (ம)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் மைத்திரியிடமும் விசாரணை வேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, செப்.17
இலங்கையில் கடந்த 2019 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்து அப்போது ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனவிடமும் விசாரணை நடத்தப்படவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.
கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினரான திஸ்ஸ அத்தநாயக்க இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இவ்வாறு விசாரணை நடத்தப்படாவிட்டால், மைத்திரி - கோத்தாவுக்கு இடையே திரைமறைவிலான இரகசிய ஒப்பந்தங்கள் இருப்பதாகவே கருதவேண்டும்.
உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் அதன் விசாரணைகளைப் பார்க்கின்றபோது அதன் யதார்த்தத்தை மக்கள் நன்கு அறிந்துவருகின்றனர்.
தேசியப் பாதுகாப்பு மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகளை நடத்துவதாகவே கோத்தாபய, மஹிந்த தரப்பினர் ஜனாதிபதித் தேர்தலில் அறிவித்து வந்தனர்.
ஆனாலும் இன்றுவரை ஏன் மைத்திரிபால சிறிசேனவிடம் விசாரணை நடத்தப்படவில்லை? தகவல் அறிந்திருந்தும் அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காதவர்கள் மற்றும் தகவல்களை மறைத்தவர்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் -என்றார். (ந-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமந்திரனும் கஜேந்திரகுமாரும் அரசுக்கு ஏற்ப தூண்டுகிறார்கள்

## சித்தார்த்தன் பரபரப்புக் குற்றச்சாட்டு



**யாழ்ப்பாணம், செப். 17**

**அரசின் நோக்கத்தை தமிழ் அரசுக் கட்சியினரே நிறைவேற்றிக் கொடுக்கின்றனர். அரசுக்கு ஏற்பவே சுமந்திரனும் கஜேந்திரகுமாரும் தூண்டுகின்றனர் என்று புளொட் தலைவர் த.சித்தார்த்தன் குற்றம்சாட்டினார். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எங்களுக்கும் இடையில் ஆயிரம் முரண்பாடுகள் இருந்தன. அதற்காக புலிகளை சர்வதேசத்திடம் காட்டிக்கொடுப்பதற்கு நாம் தயாரில்லை. அதேநேரம், எங்களை விசாரிப்பதை நாங்கள் வரவேற்கின்றோம். அந்த விசாரணையை எதிர்கொள்வதற்கும் தயாராக இருக்கின்றோம். இவ்வாறு புளொட் அமைப்பின் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்தார்.**

சுன்னாகம் கந்தரோடையில் உள்ள அவரது இல்லத்தில் நேற்றுக் காலை நடத்திய ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், இறுதிப் போரில் இராணுவத்தின் வெற்றியில் புளொட்டுக்கும் பங்கிருப்பதாக அதன் தலைவர் சித்தார்த்தன் உரிமை கோரியிருந்தார் என்று தெரிவித்திருந்தார். அத்துடன் அவர்கள் மன்னிப்பளிக்கப்பட்டு கூட்டமைப்புடன் இணைக்கப்பட்டனர் எனவும் குறிப்பிட்டிருந்தார். இதே போன்றதொரு கருத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் முன்வைத்திருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் மேலும் தெரிவித்ததாவது,

ஒவ்வொரு தேர்தல் காலத்திலும் எங்களை நோக்கி துரோகிகள் என்று தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்தவர்களும் சொல்வது வழமை. தேர்தல் காலங்களில் மக்கள் மத்தியில் உள்ள எனது செல்வாக்கை குறைப்பதற்காக அவர்கள் அவ்வாறு சொல்லிக் கொள்வதாக நான் எண்ணிக் கொள்வதுண்டு. ஆனால் இப்போதும் தேர்தல் கால குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர்.

நாம் தமிழ் அரசுக் கட்சியை விடுத்து வேறு கட்சிகளுடன் இணைந்து ஐ.நா.வுக்கு கடிதம் அனுப்பியிருந்தோம். அவ்வாறு அனுப்புவதற்குக் காரணம் உண்டு. தமிழீழ விடுதலைப் புலிகளின் போர்க்குற்றங்களையும் விசாரியுங்கள் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தனது கடிதத்தில் கோரியிருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் போர்க் குற்றங்களை விசாரியுங்கள் என்று கோருவது புத்திசாலித்தனமான செயற்பாடு அல்ல. அவ்வாறு கோருவதன் ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகளும் ஏதோ பெரிய போர்க்குற்றம் புரிந்திருக்கின்றார்கள் என்ற தோற்றப்பாடே மேலெழும். தமிழீழ விடுதலைப் புலிகளை விசாரிக்கக் கோருவது என்பது அவர்கள் முன்னெடுத்த ஆயுதப் போராட்டத்தை கொச்சைப்படுத்துவது போன்றது. விடுதலைப் போராட்டமானது ஒட்டுமொத்த தமிழ் மக்களாலேயே முன்னெடுக்கப்பட்டது. ஒட்டுமொத்த தமிழ் மக்களின் ஆதரவுடன்தான் அது நடத்தப்பட்டது.

தமிழ் அரசுக் கட்சி தனது கடிதத்தில் குறிப்பிட்டதைப்போன்று புலிகளை விசாரிக்கக் கோருவதற்கு எம்மால் உடன்பட முடியாது. புலிகளை சர்வதேச சமூகத்திடம் காட்டிக் கொடுப்பதற்கு நாங்கள் தயாரில்லை. போர்க் காலத்தில் எங்களுக்கும் புலிகளுக்கும் இடையில் ஆயிரம் முரண்பாடுகள் இருந்தன. அவை அந்தக்காலத்துக்குள்ளேயே தீர்க்கப்பட்டன. அந்தக் காலத்தில் ஆயுத இயக்கங்களில் இருந்தவர்களுக்கு இது தெரியும்.

தமிழ் அரசுக் கட்சியினர் கே.பி., பிள்ளையான், கருணா போன்றவர்கள் விசாரிக்கப்படவேண்டும் என்று கூறுகின்றார்கள். கே.பி.யை எடுத்துக் கொள்ளுங்கள். அவர் போர் முடிந்த சில நாள்களில் கைது செய்யப்பட்டார். அன்றிலிருந்து இன்று வரை அவரைச் சுற்றி 15 இராணுவத்தினர் காவலுக்கு நிற்கின்றார்கள். கே.பி. விசாரிக்கப்பட்டால் அவர் புலிகள் அமைப்பிலிருந்த காலத்தைப் பற்றியே விசாரிக்கப்படும். அவ்வாறு முன்னெடுத்தால், சர்வதேச வலைப்பின்னலுடன் தொடர்புடைய விடுதலைப் புலிகள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் அகப்படுவார்கள்.

அரசின் நோக்கத்தை தமிழ் அரசுக் கட்சியினரே நிறைவேற்றிக் கொடுக்கின்றார்கள்.

நாங்கள் ஒருபோதும் இறுதிப் போரில் நடந்தவற்றை விசாரிக்க வேண்டாம் என்று கூறவில்லை. இறுதிப் போரில் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பில் விசாரிக்க வேண்டும் என்று பல தடவைகள் திரும்பத் திரும்பக் கூறி வருகின்றோம். அதேபோன்று எங்கள் மீதும் சுயாதீன விசாரணை நடத்தப்படுவதை நாங்கள் வரவேற்கின்றோம். அதனை எதிர்கொள்வதற்கும் தயாராக இருக்கின்றோம். அவ்வாறு ஒரு விசாரணை நடத்தப்படுவதன் ஊடாக நாம் குற்றமற்றவர்கள் என்பது நிரூபணமாகும்.

சுமந்திரன், கஜேந்திரகுமார் போன்றவர்கள் எங்களைத் தூண்டிவிடுகின்றார்கள். எங்களைப்பற்றிக் கூறி நாங்கள் பதிலுக்கு முழு உண்மையையும் வெளிப்படுத்தினால் அது விடுதலைப் புலிகளையே பாதிக்கும். அவ்வாறு நடக்க வேண்டும். அதன ஊடாக இலங்கை அரசு அடைய வேண்டியதை அடையட்டும் என்பதற்காகவே இவர்கள் இவ்வாறு தூண்டி விடுகின்றார்களோ என்ற சந்தேகம் உண்டு.

அதேவேளை கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் எங்களது இயக்கம் தொடர்பிலான ஆதாரம் உண்டு. அவரது தந்தையார் குமார் பொன்னம்பலம், தனக்கு சிலரால் உயிர் ஆபத்து இருக்கின்றது என்று எமக்குக் கூறி எங்களது தோழர்கள் சிலரை தனது பாதுகாப்புக்குக் கோரினார். அவர்களும் பாதுகாப்பு வழ்ங்கினார்கள். அது சட்டவிரோதம் என்று இப்போது நினைக்கின்றாரோ தெரியவில்லை.

மேலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், 2009ஆம் ஆண்டு போர் முடிவடைந்த கையோடு நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில், பயங்கரவாதத்தை ஒழித்து மக்களை மீட்டமைக்காக நன்றி தெரிவிப்பதாக மஹிந்த ராஜபக்சவை பார்த்துத் தெரிவித்தார். பின்னர் 2012ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் சம்பந்தன் உரையாற்றும்போது, விடுதலைப் புலிகளின் கொலைப் பட்டியலில் தானும் இருந்தேன் என்று குறிப்பிட்டிருந்தார். உண்மையில் புலிகளால் மன்னிக்கப்பட்டது சம்பந்தன்தான். இவற்றை சுமந்திரன் ஆராய்ந்து அறிந்து படித்துக் கொள்ளவேண்டும், - என்றார். (ஒ.5)

# ஆணையாளரது அறிக்கையை முழுமையாக வரவேற்க முடியாது

## புளொட் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 17

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரது வாய்மூல அறிக்கையை நாம் முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாது. இவ்வாறு புளொட் அமைப்பின் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரது வாய்மூல அறிக்கையில் பல விடயங்கள் கூறப்பட்டுள்ளன. குறிப்பாக இலங்கையின் இராணுவமயமாக்கல் தொடர்பில் பேசப்பட்டுள்ளது. அந்த விடயத்தை வரவேற்கின்றோம். பாதிக்கப்பட்ட தரப்புக்களால் நிராகரிக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தை ஐ.நா. ஆணையாளர் வரவேற்றுள்ளார். இதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமுடியாது. தமிழ் மக்களின் முக்கிய அவதானமாக உள்ள பொறுப்புக் கூறல் விடயத்தை ஆணையாளர் அழுத்தமாகச் சொல்லவில்லை. இதானால் ஆணையாளரது அறிக்கையை முழுமையாக வரவேற்கமுடியாது - என்றார். (ஒ.5)

# மோசடிக் கும்பலிடம் லட்சக்கணக்கில் பணத்தை இழக்கும் மன்னார் வாசிகள்

மன்னார், செப். 17

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக நூதனமான முறையில் ஏழை மக்களிடமிருந்து லட்சக்கணக்கில் பணத்தைக் கொள்ளையிடும் சம்பவங்கள் அதிகரித்துக்காணப்படுகின்றன.

இந்த மோசடிக் கும்பல் இலங்கையில் பிரபலமாக இருக்கும் தொலைத்தொடர்பு நிறுவனத்தில் இருந்து பேசுவதாகவும் அவர்கள் தொடர்பு எடுக்கும் நபர்களுக்கு பெரிய பணத்தொகை அதிர்ஷ்டத்தின் மூலம் விழுந்துள்ளதாகவும் அந்தப் பணத்தை பெறுவதற்காக உடனடியாக 50 ஆயிரம் ரூபா மற்றும் ஒரு லட்சம் ரூபாவை தமது வைப்பில் இடுமாறும் கூறுகின்றனர்.

இதனை நம்பி பலர் பெரிய தொகைப் பணம் கிடைப்பதாக நினைத்துக் கொண்டு தங்களின் கையில் இருக்கும் பணத்தை மட்டுமல்ல கடன்களை பெற்றும் அனுப்பியுள்ளனர்.

அது மட்டுமல்ல வெளிநாடுகளில் இருந்து உங்களுக்கு தேவையான பொருள்களை பார்சல் மூலம் அனுப்பி விடுவதாகவும் அதனை விற்பனை செய்து ஏழை எளிய மக்களுக்கு வழங்குங்கள் என்று கூறியும் பலரிடம் பண மோசடி இடம்பெற்றுள்ளது.

குறித்த மோசடிக்காரர்கள் கேட்கும் தொகையை அனுப்பி சிறிதுநேரத்தில் மோசடிக்காரர்களின் தொலைபேசிகள் இயங்காமல் போய்விடுகின்றன. மன்னார் நகரம் மற்றும் நானாட்டான் பிரதேச செயலக பிரிவிலுள்ள பலரும் இவ்வாறு மோசடிக்காரர்களிடம் ஏமாந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரி-20 இந்திய அணியின்


# தலைவர் பதவியிலிருந்து விலகினார் விராட் கோலி

புதுடில்லி, செப். 17

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோலி, ரி-20 போட்டி அணித் தலைவர் பதவியிலிருந்து விலகுகின்றேன் என்று அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பு, அவருடைய ரசிகர்கள் மத்தியில் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து விராட் கோலி வெளியிட்டுள்ள ருவிற்றர் பதிவில்,

இந்தியாவுக்காக விளையாடியது மட்டுமல்லாமல், இந்திய அணியை வழிநடத்தியதும் எனக்கு கிடைத்த மிகப் பெரிய அதிர்ஷ்டம். இந்திய கிரிக்கெட் அணியின் தலைவனாக நான் இருந்த காலத்தில் எனக்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி. என்னுடைய அணி



வீரர்கள், அணி நிர்வாகக் குழு, தேர்வுக் குழு, பயிற்சியாளர்கள் மற்றும் நாங்கள் வெற்றி பெற வேண்டும் என நினைத்த ஒவ்வொரு இந்தியருக்கும் நன்றி. அவர்கள் இல்லாமல் நான் இதைச் செய்திருக்க முடியாது.

வேலைப் பளு என்பது மிக முக்கியமான விஷயம் என்பதைப் புரிந்துகொள்கிறேன். கடந்த 8 முதல் 9 ஆண்டுகளாக நான் மூன்று வித கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாடி வருகின்றேன். அதிக வேலைப் பளு இருப்பதை உணர்கிறேன். அதேபோல கடந்த 5 முதல் 6 ஆண்டுகளாக அணியின் தலைவனாகச் செயற்பட்டு வருகின்றேன். அதனாலும் வேலைப் பளு அதிகமாக உள்ளது. எனவே இந்திய அணியை டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் வழிநடத்த எனக்கு சற்று வேலைக் குறைப்புத் தேவைப்படுவதாக நினைக்கிறேன். அதன் பொருட்டு அடுத்த மாதம் டுபாயில் நடக்கும் ரி-20 உலகக் கோப்பை தொடருடன் ரி-20 போட்டியின் அணித்தலைவர் பதவியிலிருந்து விலகுகிறேன். நான் தலைவர் பதவியிலிருந்து விலகினாலும் ஒரு துடுப்பாட்டக்காரனாக ரி-20 அணிக்கு எனது பங்களிப்பை முழுமையாகக் கொடுப்பேன். என்று குறிப்பிட்டுள்ளார். (த-இ)


**விதை நெல் விற்பனைக்கு**

சுத்திகரிக்கும் இயந்திரம் மூலம் சுத்திகரிக்கப்பட்டு முளைத்திறன் பரிசீலிக்கப்பட்ட அதிக விளைச்சலைக் கொண்ட 3 1/2 மாத BG 34.6 நெல்லும் 04 மாத விதை நெல்லும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 077 659 2044

**நெல்லியடியில் கடைக் கட்டிடம் விற்பனைக்கு**

நெல்லியடிச் சந்திக்கு அருகாமையில் மேல் மாடியுடன் கூடிய கடைக் கட்டிடம் விற்பனைக்கு.

தொடர்பு: 076 5768 514


## மரண அறிவித்தல்



**திருமதி தனலட்சுமி அமிர்தலிங்கம்**

பிறப்பு 29.03.1957 — இறப்பு 15.09.2021

முல்லைத்தீவு உநாப்பிலவை பிறப்பிடமாகவும். யாழ்ப்பாணம் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட தனலட்சுமி அமிர்தலிங்கம் அவர்கள் நேற்று முன்தினம் (15.09.2021) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பொன்னம்மாவின் மகளும். காலஞ்சென்ற சுப்பிரமணியம் பாக்கியம் ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் அமிர்தலிங்கத்தின் துணைவியும். அமிர்தவர்சினியின் (யாழ்ப்பாண பல்கலைக்கழகம்) அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

யாழ் வீதி,
மானிப்பாய்

தகவல்:
குடும்பத்தினர்
077 422 2167

**NOTICE**

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

**OPERATIONAL TECHNICAL SECRETARIAT (OTS)**

**WORLD BANK FUNDED ACCELARATING HIGHER EDUCATION EXPANSION AND DEVELOPMENT (AHEAD) OPERATION**

**POST OF TECHNICAL ASSISTANT (FULL TIME) - ON CONTRACT BASIS - 01 VACANCY**

**POST OF PROJECT ASSISTANT (FULL TIME) - ON CONTRACT BASIS - 01 VACANCY**

The University of Jaffna, Sri Lanka will entertain applications for the above mentioned posts under OTS - AHEAD Operation from suitably qualified persons up to 30.09.2021.

**Applicants are requested to visit Jaffna University website www.jfn.ac.lk for further details.**

Registrar

# நாட்டை நாசமாக்கும் ராஜபக்ச அரசு வீடு செல்லும் காலம் தொலைவில் இல்லை

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு



கொழும்பு, செப். 17

வெளிநாடுகளுக்கு நாட்டைத் தாரைவார்க்கும் ராஜபக்ச அரசு வீட்டுக்குச் செல்லும் காலம் வெகுதொலைவில் இல்லை என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்களுக்குக் கருத்துரைத்த ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

"விசேடமாக செலந்திவா நிறுவனத்தினூடாக நாட்டின் தேசிய சொத்துக்களைச் சட்டபூர்வமாக விற்பனை செய்வதற்கு ராஜபக்ச அரசு முயற்சித்து வருகின்றது.

குறிப்பாக கொழும்பு நகரின் முக்கிய இடங்கள், சொத்துக்கள் என்பற்றைக் குறித்த நிறுவனத்தினூடாக விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தநிலையில், ராஜபக்ச அரசு தற்போது புதிதாக துறைமுக அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் இருக்கும் 13 ஏக்கர் நிலப்பரப்பை அடிமட்ட விலைக்கு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இதனை நினைத்தும் பார்க்க முடியவில்லை.

சீன நிறுவனமொன்று கொழும்புத் துறைமுகத்தின் 13 ஏக்கர் நிலப்பரப்பைத் தருமாறு ராஜபக்ச அரசிடம் கோரியுள்ளது. எதற்காக இந்த நிலப்பரப்பை விற்பனை செய்கின்றனர்? இவை நாட்டின் தேசிய வளங்களாகும்.

நாட்டின் பொருளாதாரத்துக்கு ஆணிவேராக இருக்கின்ற துறைமுகம், விமான நிலையம் போன்ற இடங்களை விற்பனை செய்வதனூடாக எவ்வாறான வியாபாரத்தை முன்னெடுப்பதற்கு ராஜபக்ச அரசு முயற்சிக்கின்றது?

ராஜபக்ச அரசிடம் பணம் இல்லையாயின் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கான மாற்று வழிகளைக் கையாள வேண்டும். இதற்கு துறைமுக அதிகார சபை அதிகாரிகள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். துறைமுக ஊழியர்கள் எதிர்ப்பை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான எதிர்ப்புகள் இருக்கும்போது இந்த விற்பனை நடவடிக்கையை முற்றாக நிறுத்துமாறே நாம் ராஜபக்ச அரசைக் கோருகின்றோம்.

இந்த விற்பனைகளின் மூலம் எமது நாட்டிலுள்ள சகல தேசிய வளங்களும் இல்லாமல் போகும். தேசிய வளங்களை விற்று வாழ்வதற்கு முயற்சிப்பது முற்றிலும் தவறான விடயமாகும்" என்றார். (த-22)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி...

### நாடுதிரும்புவோருக்கு....

என்று சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் சுகாதார நிலைமைகளை ஆராய்ந்து, சுற்றுலா உட்பட நாட்டின் அத்தியாவசிய விடயங்களில் சில தளர்வுகள் இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில், அவர் மேலும் தெரிவிக்கையில், உலகளாவிய போக்கையும், நாட்டின் முக்கிய வருமான ஆதாரமாக இருக்கும் சுற்றுலாத் துறையையும் மேம்படுத்துவது அவசியம். அதற்காக சுகாதார வழிகாட்டுதல்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்க அதிகபட்ச சாத்தியமான திட்டத்தைச் செயற்படுத்த வேண்டும்.

அதன்படி நாடு திரும்புவோர் நாட்டுக்கு வருகை தந்தவுடன் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். இந்தப் புதிய திட்டம் அடுத்த வாரம் தொடங்கும். தொற்று இல்லை என்று பரிசோதனை முடிவு கிடைக்கப்பெற்றால், விமான நிலையத்திலிருந்து அவரவர்களின் வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள். இனிமேல் அவர்கள் பி.சி.ஆர். சோதனைக் காலத்தில் ஹொட்டலில் தங்குவதற்கு பணம் செலுத்த வேண்டியதில்லை. அதேநேரத்தில் இந்த நடவடிக்கைக்குச் செலவிடப்பட்ட நேரமும் குறைக்கப்பட்டுள்ளது. - என்றார். (த-இ)

### விடுதலைப்....

ஸாரால் மீட்கப்பட்டன.


ஆட்களற்ற காணியுடனான சிறிய குளம் ஒன்று அங்கு உள்ளது. அதனுடன் இணைந்ததாகப் பற்றைக்காடு காணப்படுகின்றது. அதில் வெடிகுண்டுகள் காணப்படுகின்றன என்று பொதுமகன் ஒருவர் கொடிகாமம் பொலிஸாருக்குக் கூறியுள்ளார்.

அதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், 15 கிலோகிராம் மற்றும் 10 கிலோகிராம் நிறையுடைய உள்ளூர் தயாரிப்பான குண்டுகளை மீட்டனர். (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 13 . 04 . 1946



இறப்பு 13 . 09 . 2021

## திரு. சிவகுருநாதன் நல்லையா (சந்திரன்)

யாழ். உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும், ஐக்கிய அமெரிக்கா Boston, New Hampshire, Rochester ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சிவகுருநாதன் நல்லையா அவர்கள் 13-09-2021 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற நல்லையா, தங்கரட்ணம் (உரும்பிராய் தெற்கு) தம்பதிகளின் அன்புப் புத்திரனும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், நாகம்மா (புலோலி பருத்தித்துறை) தம்பதிகளின் அன்பு மருமகனும்,ஜான்சிராணி அவர்களின் அன்புக் கணவரும், கார்த்திகா, செந்தூரன், கிருபாகரன், கார்த்தீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,கருணாகரன், திவ்யா, சுவேதா ஆகியோரின் அன்பு மாமனாரும், சகுந்தலாதேவி, தவக்குமார், சாந்தி, நளா, கலா, சட்டநாதன், அமுதினி, துஷ்யந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும்,விஜயகரன், சுகந்தி, Dr. சோமாஸ்கந்தா, சங்கரமூர்த்தி, யோகேஸ், சிறீகாந்தா, பாலவாணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிருஷிகா, கஜானா, கிருஷான், சிறீஹான், விவான், சகானா ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.09.2021) சனிக்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு

தகவல் : குடும்பத்தினர்

கார்த்திகா - மகள்: +17818163034, செந்தூரன் - மகன் : +16035081124, கிருபாகரன் - மகன் : +16038979680, தீபன் - மகன் : +17815721627.



# McLeod Hospital

## கொரோனா இடைத்தங்கல் சிகிச்சை நிலையம்

## Park View Hotel

உங்கள் அன்புக்குரியவர்களை வீட்டில் பாதுகாப்பாக இருப்பதை உறுதிப்படுத்தி நீங்கள் கொரோனாவிலிருந்து குணமாகுவதில் கவனம் செலுத்துங்கள்



- HDU வசதி
- 24/7 மருத்துவ கண்காணிப்பு
- அவசர நிலையில் Level 2,3 நிலையங்களுக்கான மாற்றும் வசதி
- அமைதியான சகல வசதியுடனான சூழல்
- தேர்வு செய்ய கூடிய உணவு வகைகள்
- பொழுது ஆரோக்கியமாக செலவிட வசதிகள்
- உள ஆரோக்கியம் பேண வசதிகள்

கடனட்டைகளுக்கான 0% தவணை முறை கொடுப்பனவு வசதிகள் உண்டு. (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

**தங்குமிட மருத்துவ வசதியுடன் ரூபா 8000 இலிருந்து**

**K.K.K Road, Inuvil, Jaffna. Sri Lanka**

**தொடர்புகளுக்கு :**

**077 121 5005 / 076 394 4346 / 076 011 4694**


**24 மணி நேரம் இயங்கும் அம்புலன்ஸ் வசதிகளுடன்**

McLeod Hospital PARKVIEW hotel



# மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 04 . 1934



மறைவு 15 . 09 . 2021

## ஆறுமுகம் குமாரசாமி

நெடுந்தீவு மேற்கை பிறப்பிடமாகவும் கனடா மற்றும் வவுனியா பூந்தோட்டத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் ஆறுமுகம் குமாரசாமி அவர்கள் கடந்த (15.09.2021) புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் குஞ்சாச்சிப்பிள்ளை அவர்களின் மூத்த மகனும் தேவநாயகியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற அருமைத்தம்பி அமரர் ஆறுமுகம் மயில்வாகனத்தின் பாசமிகு சகோதரரும் சபாலிங்கம், தனலட்சுமி, அமரர் சண்முகலிங்கம், கௌமளேஸ்வரி, அமரர் கணேசலிங்கம், சுமதி, இந்துமதி, பேரின்பலிங்கம், சுந்தரலிங்கம், வரதலட்சுமி ஆகியோரின் பாசமிகு தந்தையும் மனோரஞ்சிதம், நவரத்தினசிங்கம், இந்திராதேவி, பரமதாஸ், உதயராஜ், சந்திரா, விஜிதா, பகீரதன் ஆகியோரின் அன்பு மாமனும், அமரர் துவாரகன், அமரர் தயாசிறி, ஜீவநிதி+ சிவதர்சன், சயந்தநிதி + தினேஸ், சுகேந்திரன், செந்தூரன், பிரியா + யசிந்தன், சபேசன்+இசைநிலா, கிருஜநிலா, கணநிலவன், ஜதுசன், வர்ணஜா, விவேனுகா, நாடியா, கரன், லக்சி, சயிந், அஜித், ஆரணன், பிரவீன் ஆகியோரின் அன்பு பேரனும், ஆதனா, கிஷாரா, ரிதேஸ், ஹரிசா, ஹரணி, மஹிரா, ஸானுகா, ஸாருகன் ஆகியோர் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு PSC வீதி பூந்தோட்டம் வவுனியாவில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளிற்காக பூதவுடல் பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

மகன் கு.சபாலிங்கம் (JP) - 0770415755

மருமகன் இ.உதயராஜ் (ஆசிரியர்) - 0767625415

# மரண அறிவித்தல்

மண்ணில் 31 . 05 . 1945



விண்ணில் 10 . 09 . 2021

## திருமதி மகேஸ்வரி சுந்தரலிங்கம்

## (காரைநகர்)

காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகவும், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும், பயரிக்கூடலை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சுந்தரலிங்கம் அவர்கள் கடந்த (10.09.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துநம்பு விசாலாட்சி தம்பதியினரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற செல்லப்பா (மலாயன்பென்சனியர்) பொன்னம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற சுந்தரலிங்கத்தின் (ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர்) பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற இராசம்மா, பரமசிவம், மற்றும் ஈஸ்வரி (வவுனியா), சரஸ்வதி, வள்ளியம்மை, உமாதேவி (லண்டன்) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற பத்மலோசனி அம்மா, புவனேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) மற்றும் சண்முகராசா (ஓய்வு பெற்ற முகாமைத்துவ உதவியாளர்) - நேசரத்தினம் (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்), கமலாதேவி, இராசலட்சுமி, காலஞ்சென்ற தியாகலிங்கம், சிவசோதி, சிவபாலன் ஆகியோரின் மைத்துனியும், சுந்தர்ராஜன் (கனடா), பகீரதன் - தயாநிதி (கனடா), இராகுலன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), தர்சினி, தியாகசொரூபி (ஆசிரியர், யா/ திருக்குடும்ப கன்னியர்மடம் - தேசிய பாடசாலை) - தவராசா, சுதாகரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற வினோதன், சூரியகலா (தேர்தல் திணைக்களம் - கச்சேரி, யாழ்ப்பாணம்) சிவசூரியர் (Assistant Manager), சிவஞானதேவி, சிவநிமலன், சிவசுதன் ஆகியோரின் பாசமிகு பெரிய மாமியும், வையந்திமாலா (கனடா), பத்மப்பிரியா (லண்டன்), திருமகள் (சுவிஸ்), தர்மசீலன், தாரணி, தர்மபுத்திரன் (லண்டன்) ஆகியோரின் பெரியம்மாவும், சிவபாதம் (கனடா), சிவகாடாட்சம், சிவசோதி (கனடா), காலஞ்சென்ற இராசேந்திரன் மற்றும் இரவீந்திரன், பாலேந்திரன் (லண்டன்), மங்கையற்கரசி, மனோன்மணி, திலகவதி (கனடா), திருமகள் ஆகியோரின் பாசமிகு சிறிய தாயும், சுஜீவா (கனடா), சுகிர்தன் (கனடா), பிரியங்கா (கனடா), டிலக்சன், டிலக்சனா, வித்திகா, ஹரணி (ஜேர்மனி), தனுஜன் (ஜேர்மனி), சஸ்வினி, சுகர்சன், ஹரணிகா, நிசான் (கனடா), அக்ஷா (கனடா), அஸ்வின் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2021) வெள்ளிக்கிழமை மூன்று (3.00) மணியளவில் நடைபெற்று கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பயரிக்கூடல், காரைநகர்.

078 320 1541 (மருமகள்)

077 034 4955 (மருமகன்)

தகவல் :

திரு. திருமதி தவராசா தியாகசொரூபி (குடும்பம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொற்று2,271...

ப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 98 ஆயிரத்து 694 ஆக அதிகரித்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் ஆயிரத்து 336 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 28 ஆயிரத்து 590 ஆக உயர்வடைந்துள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 118 பேர் சாவடைந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன உறுதிப்படுத்தியுள்ளார்.

இதன்படி நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 11 ஆயிரத்து 817 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 118 பேரில் 61 ஆண்களும், 57 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் 12 ஆண்கள், 11 பெண்கள் என 23 பேர் 30 க்கும் 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 95 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 49 ஆண்களும், 46 பெண்களும் அடங்குகின்றனர். (த-22)

## ஊரடங்கை...

இதனால் ஊரடங்கைத் தளர்த்தாது மேலும் தொடர்வதே பொருத்தமானது என்றும் அந்தச் சங்கம் நேற்று அறிக்கை வெளியிட்டு குறிப்பிட்டுள்ளது.

இலங்கை தொடர்ந்தும் கொரோனா பரவலில் சிவப்பு வலயத்திலேயே இருக்கின்றது. அது பச்சையாக மாறிய பின்னரே ஆரோக்கியமான நிலைக்கு நாடு வந்துள்ளது என்று எடுத்துக்கொள்ள முடியும் என்றும் அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, ஊரடங்கை 21 ஆம் திகதியுடன் தளர்த்துவதா? இல்லையா? என்பது குறித்து இன்று முற்பகல் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நடைபெறவுள்ள கொரோனா ஒழிப்புச் செயலணிக் கூட்டத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-22)

## வெடுக்கு நாறி...

தொடர்பான வழக்குகள் வவுனியா நீதிமன்றில் விசாரணையில் உள்ளன.

இந்தநிலையில், குறித்த கோவில் பகுதியில் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ள இந்து விக்கிரகங்களான அம்மன், முருகன் சிலைகள் காணாமல் போயுள்ளன. சில விக்கிரகங்கள் உடைத்து அழிக்கப்பட்டுள்ளன என்று பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தநிலையில், நேற்றுக்காலை தொடக்கம் கோவிலைநோக்கி உழவியந்திரங்களில் பௌத்த தேரர்கள் அமரும் கதிரை உட்பட பல்வேறு பொருள்கள் இராணுவத்தினரால் எடுத்துச்செல்லப்படுகின்றன. சொகுசு வாகனங்களும் உட்செல்கின்றன என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆதிலிங்கேஸ்வரர் கோவிலை பௌத்த மயமாக்குவதற்கான செயற்பாடுகளை இராணுவம் மூலம் அரசு முன்னெடுத்துள்ளதாகவே கருதுகின்றோம் என்றும் அந்தப்பகுதி மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

எனவே, இது தொடர்பில் தமிழ் அரசியல் தலைவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (த-110)

## ஐ.நா. கடித...

உள்ளிட்ட 9 பேரிடமும், தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ப.சத்தியலிங்கம் விளக்கம் கேட்டுக் கடிதம் அனுப்பியுள்ளார்.

தமிழ் அரசுக் கட்சி ஜெனிவாவுக்கு அனுப்பிய கடிதத்தில், தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விசாரணை நடத்த வேண்டும் என்ற விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்த விடயத்தில் அதிருப்தியடைந்த தமிழ் அரசுக் கட்சியின் ஒரு அணியினர், அதற்குப் புறம்பாக வேறு ஒரு கடிதத்தை ஐ.நாவுக்கு அனுப்ப முயன்றனர். அதன்படி தயாரிக்கப்பட்ட கடிதத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், சாள்ஸ் நிர்மலநாதன், கலையரசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், அரியநேந்திரன், சிறிநேசன், யோகேஸ்வரன் ஆகியோரும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் நடராஜா, மட்டக்களப்பு மாநகர சபை முன்னாள் முதல்வர் சரவணபவன் ஆகிய 9 பேரும் அதில் கையெழுத்திட்டிருந்தனர்.

அந்தக் கடிதத்தை ஐ.நாவுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்திருந்தநிலையில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பின்வாங்கியமையால் அந்தக் கடிதம் அனுப்பப்படவில்லை.

இந்தநிலையில், குறித்த கடிதம் தயாரித்தமை மற்றும் கையெழுத்திட்டமை தொடர்பில் விளக்கம்கேட்டு சிலருக்கு மாத்திரம், வட்ஸ்அப் மற்றும் வைபர் ஊடாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இது தொடர்பில், தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் சத்தியலிங்கத்திடம் நேற்றிரவு கேட்டபோது, குறித்த கடிதத்தில் கையெழுத்திட்ட 9 பேரிடமும் விளக்கம் கேட்டு சமூக வலைத்தளம் ஊடாக கடந்த செவ்வாய்க்கிழமை கடிதம் அனுப்பியுள்ளேன். அவர்கள் 9 பேரும் கடிதத்தைப் பார்வையிட்டுள்ளனர். அவர்களின் பதிலைக் கொண்டு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார். (த-22)

## தியாக தீபம்...

பிறப்பித்துள்ளது.

"தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினரான திலீபனின் நினைவேந்தல் 15ஆம் திகதி (நேற்றுமுன்தினம்) தொடக்கம் எதிர்வரும் 26ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படவுள்ளதாக பொலிஸ் நிலைய புலனாய்வு உத்தியோகத்தர்களால் நம்பகரமான தகவல் கிடைத்துள்ளது.

இவ்வாறான நிகழ்வு நடந்தால் இதற்கு எதிரானவர்கள், எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடவாய்ப்பு உள்ளது. அதுமட்டுமன்றி, நாட்டில் கொரோனா நோய்த் தாக்கம் அதிகரித்துள்ளதால், அதைக் கட்டுப்படுத்தும் முகமாக சுகாதார நடவடிக்கையை நாட்டு மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் காணப்படுகின்றது. எனவே, இவ்வாறான நினைவேந்தல் நடவடிக்கைக்கு நீதிமன்று தடை உத்தரவு பிறப்பிக்கவேண்டும்" என்று காத்தான்குடி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி கஜநாயக்கா மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் விண்ணப்பித்தார்.

அதனை ஏற்றுக்கொண்ட நீதிமன்று, நினைவேந்தலுக்கு, பொலிஸார் கோரியபடி தடை உத்தரவு விதித்து கட்டளை பிறப்பித்தது. (த-இ)

## வவுனியாவில்...

அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அவர்கள், மருத்துவமனையின் கொரோனா சிகிச்சை விடுதியில் பெற்று வந்த நிலையில் உயிரிழந்தனர்.

மற்றையநபர், பம்பைமடுவில் அமைந்துள்ள முதியோர் காப்பகத்தில் சுகவீனம் காரணமாக உயிரிழந்தார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (த-110)

## அநுராதபுரம்....

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை கடந்த 12ஆம் திகதி சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் நேரடியாகச் சென்று அச்சுறுத்தியிருந்தார். அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட கண்டன அலைகளால், அவர் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து மட்டும் விலகியுள்ளார்.

இந்தநிலையில், நேற்றுக்காலை அநுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள அரசியல் கைதிகளைப் பார்வையிடுவதற்காக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் சட்டத்தரணிகள் சென்றிருந்தனர். எனினும், அவர்கள் சிறைச்சாலைக்குள் செல்வதற்கு சிறைச்சாலைத் தரப்பினர் அனுமதி மறுத்துள்ளனர்.

"கொரோனாத்தொற்று அதிகரித்து வருகின்ற நிலையில் அனுமதிக்கமுடியாது என்றும், அவ்வாறு அனுமதிப்பதாக இருந்தால் கொழும்பிலுள்ள சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சிடம் அனுமதி பெற்றுக்கொள்ளுங்கள் என்றும், தங்களுக்கு அறிவித்தல் கிடைத்தால், சிறைச்சாலைக்குள் செல்ல அனுமதிப்போம் என்றும் சிறைச்சாலை அதிகாரிகள் கூறியுள்ளனர்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சின் செயலாளருக்குத் தொடர்பு ஏற்படுத்தியபோதும், எந்தப் பதிலும் இல்லாதநிலையில் சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை சந்திக்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

அமைச்சர் நாமல் ராஜபக்ச, தமிழ் அரசியல் கைதிகளை இன்று (நேற்று) சந்திக்கவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும், எமக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. எனினும், நாங்கள் தொடர்ந்தும் முயற்சிகளை எடுப்போம்." என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஊடகங்களுக்குத் தெரிவித்தார். (த-19)

## தமிழ் அரசியல்....

அரசியல் கைதிகளை முழந்தாளிடச் செய்து, துப்பாக்கி முனையில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த அச்சுறுத்திய சம்பவத்தைத் தொடர்ந்து, கைதிகள் முன்வைத்து வேண்டுகோளுக்கு அமைவாக அமைச்சர் நாமல் ராஜபக்ச இந்தப் பயணத்தை மேற்கொண்டார்.

இந்தச் சந்திப்பின்போது தமிழ் அரசியல் கைதிகள், தங்கள் துன்பங்களையும் கவலைகளையும் பகிர்ந்துகொண்டனர் என்று அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

"தமிழ் அரசியல் கைதிகள் குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டவுடன் மறுவாழ்வு மற்றும் சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைப்பது உள்ளிட்ட பிரச்சினைகளை நான் கவனிப்பேன் என அவர்களிடம் உறுதியளித்தேன்" என்றும் அமைச்சர் நாமல் ராஜபக்ச மேலும் குறிப்பிட்டார். (த-22)

## முல்லைத்தீவைச்....

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு உடையார்கட்டைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையாரே விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்த அவர், 2009 ஆம் ஆண்டு மே 19 ஆம் திகதி படையினரால் கைதுசெய்யப்பட்டு, மூன்று ஆண்டுகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அவர் மீதான வழக்கு உயர்நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம், 2012ஆம் ஆண்டு மார்ச் 24ஆம் திகதி தொடக்கம் ஓர் ஆண்டு புனர்வாழ்வு பெற்று 2013ஆம் ஆண்டு மார்ச் 23ஆம் திகதியன்று விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

அதன்பின்னர் குடும்பத்துடன் வாழ்ந்துவந்த நிலையில், 2013ஆம் ஆண்டு ஜூலை 9 ஆம் திகதி அன்று தொலைபேசிமூலம் விசாரணைக்காக அழைக்கப்பட்டு மீண்டும் கைதுசெய்யப்பட்டு பூசா சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். பின்னர் 2015ஆம் ஆண்டு நியூமகசின் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்தார்.

தற்போது நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் தொற்று சில சிறைச்சாலைகளுக்கும் பரவியுள்ளது. இந்த நோய் தொடர்பில் பிள்ளைகளும் தந்தையைப் பற்றி மிகுந்த கவலை தெரிவிக்கின்றார்கள். இந்த நோயில் இருந்து பாதுகாப்பதற்காக ஜனாதிபதி கருணைகூர்ந்து தனது கணவரை பிணையிலாவது விடுதலை செய்ய வேண்டும் என்று தடுத்து வைக்கப்பட்டுள்ளவரின் மனைவி, கடந்த ஆண்டு கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்தநிலையில், 8 ஆண்டுகள் கடந்த பின்னர் கொழும்பு நீதிவான் நீதிமன்றால் அவர் நேற்று விடுதலைசெய்யப்பட்டுள்ளார்.

சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர், அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று, தமிழ் அரசியல் கைதிகளை அச்சுறுத்திய விவகாரம் பெரும் சிக்கலை அரசுக்குத் தோற்றுவித்துள்ளது. அதன்தாக்கம் காரணமாக, அச்சுறுத்தல் விடுத்திருந்த சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் பதவி விலகியுள்ளார். இந்தநிலையில், குறித்த அரசியல் கைதி மாத்திரம் நேற்று விடுதலைசெய்யப்பட்டுள்ளார். இன்னும் ஏராளமான தமிழ் அரசியல் கைதிகள் சிறைச்சாலைகளில் பல வருடங்களாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 வீதமான ரசிகர்கள் ஐ.பி.எல்லில் அனுமதி

**சென்னை, ஓக. 17**

**ஐ.பி.எல் தொடரின் இரண்டாவது பாதியில் 50 வீதமான பார்வையாளர்கள் அனுமதிக்கப் படுவார்கள் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.**



இந்த வருடத்துக்கான ஐ.பி.எல் தொடர் கடந்த ஏப்ரல் மாதம் ஆரம்பமானது. இந்தியாவில் இடம் பெற்ற இந்தத் தொடரில் ரசிகர்கள் அனுமதிக்கப்படவில்லை. கொரோனாத் தொற்றுச் சூழ்நிலைகளைக் கருத்தில்கொண்டு ரசிகர்கள் இல்லாமல் தொடர் நடத்தப்பட்டது. எனினும் வீரர்களின் பயோ பபுள் வளையத்துக்குள் கொரோனா ஊடுருவியதை அடுத்து தொடர் கைவிடப்பட்டது.

இந்த நிலையில் தொடரின் இரண்டாவது பாதி ஐக்கிய அரபு இராச்சியத்தில் நாளைமறுதினம் ஆரம்பமாகின்றது. இந்தத் தொடரில் பங்கெடுப்பதற்காக அனைத்து அணிகளும் தயாராகியுள்ளன. இந்த நிலையிலேயே ரசிகர்களின் பங்கெடுப்புத் தொடர்பில் அறிவிப்பு வந்துள்ளது. இதன்படி, கொவிட் தொற்றுக்கான இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டவர்கள் ஆட்டத்தைப் பார்க்க அனுமதிக்கப்படுவார்கள். 50 வீதமான பார்வையாளர்களுடன் ஆட்டம் நடத்தப்படும் என்று முதல்கட்டத் தகவல் வெளிவந்துள்ளது. (ம)



# இந்திய அணிக்கு டோனி அவசியம்

## கங்குலி வெளிப்படை

புதுடில்லி, செப். 17

இந்திய அணிக்கு டோனியின் திறமையும் சிந்தனையும் மிகவும் அவசியமானது. அதைக் கருத்தில் கொண்டுதான் ரி20 உலகக்கிண்ணத் தொடருக்கான அணிக்கு டோனி ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் கங்குலி மேலும் தெரிவிக்கையில், 'அணியின் சூழல், நிலையை ஆய்வு செய்தபின்பு தான் ரி20 உலகக்கிண்ணத் தொடருக்கு டோனியை ஆலோசகராக, வழிகாட்டியாக நியமிக்க முடிவு செய்தோம். 2013ஆம் ஆண்டுக்குப் பின் இந்திய அணி ஐ.சி.சி சார்பில் நடத்தப்படும் எந்தப் போட்டியிலும் கிண்ணத்தை வெல்லவில்லை.

இந்த இடைவெளியை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதற்காகத்தான் டோனி நியமிக்கப்பட்டார்' - என்றார். (ம)



# மும்பைக்கு எதிராக சாம் கரன் இல்லை

துபாய், செப். 17

ஐ.பி.எல். தொடர் நாளைமறுதினம் ஆரம்பமாகவுள்ள நிலையில், முதலாவது ஆட்டத்தில் சாம் கரன் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

ஐ.பி.எல். தொடரின் இரண்டாவது பாதி நாளைமறுதினம் ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆரம்பமாகின்றது. முதலாவது ஆட்டத்தில் சென்னை மற்றும் மும்பை அணிகள் மோதுகின்றன. இந்த ஆட்டத்துக்காக இரு அணிகளும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டுவருகின்றன. ஐக்கிய அரபு இராச்சியத்தின் விதிமுறைகளின்படி அந்த நாட்டுக்குச் செல்லும் ஒருவர் 6 நாள்கள் தம்மைத் தனிமைப்படுத்த வேண்டும். தொடரில் கலந்துகொள்வதற்காக சாம் கரன் நேற்றுமுன்தினமே ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் சென்றார்.

இதனால், முதலாவது ஆட்டத்துக்கு முன்னர் அவரின் தனிமைப்படுத்தல் காலம் முடிவுக்கு வராது. இந்தச் சிக்கலால் நாளைமறுதினம் இடம்பெறும் மும்பை - சென்னை அணிகளுக்கு இடையிலான முதலாவது ஆட்டத்தில் சாம் கரன் விளையாடுவது சந்தேகமாகியுள்ளது. (ம)




# ஓகஸ்ட் மாதத்தின் சிறந்த வீரராக ரூட்

லண்டன், செப். 17

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஓகஸ்ட் மாதத்துக்கான சிறந்த வீரராக ஜோ ரூட் தெரிவாகியுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபை இந்த வருடத்தில் ,இருந்து புதிய திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதன்படி ஒவ்வொரு மாதமும் சிறந்த வீரராக ஒருவரைத் தெரிவு செய்து அறிவித்து வருகின்றது. அந்த வகையில் ஓகஸ்ட் மாதத்தின் சிறந்த வீரராக ரூட் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இந்தியாவுக்கு எதிராக ஓகஸ்ட் மாதத்தில் மூன்று டெஸ்ட் ஆட்டங்களில் களமிறங்கிய ரூட் மூன்றிலும் சதத்தைப் பதிவுசெய்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# டுபிளஸி தயார்!

துபாய், செப். 17

ஐ.பி.எல். தொடரில் டுபிளஸி விளையாடுவார் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளது சென்னை சுப்பர் கிங்ஸ்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நாளைமறுதினம் ஐ.பி.எல். தொடர் ஆரம்பமாகின்றது. இந்தத் தொடரில் டுபிளஸி விளையாடுவது சந்தேகமாக இருந்தது. முன்னதாக நடைபெற்ற கரீபியன் பிறீமியர் லீக்கில் காயமடைந்த காரணத்தால் டுபிளஸிக்கு இந்தப் பின்னடைவு ஏற்பட்டது. எனினும் அவர் தற்போது நலம் பெற்றுள்ளார் என்றும் சென்னை அணிக்காக அவர் விளையாடுவார் என்றும் சென்னை அணி நம்பிக்கை தெரிவித்துள்ளது. (ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111
விளம்பரம்: ad@uthayan.com
பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.